535



535
3-56
V211C
N56
107929

பூம்புகார்

(Pugar, the lost capital of Cholas.)

[1951 - ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிகழ்த்திய
ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தமிழாராய்ச்சிப்
போட்டியில் முதற்பரிசு பெற்ற நூல்.]

535
3-56

ஆசிரியர் :
வை. சண்முகசுந்தரம் எம். ஏ., பி. எல்.
(முந்நாளைய தமிழ் ஆசிரியர், ஜெயின் கல்லூரி, சென்னை.)

[அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைவு பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.]

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை : கோயமுத்தூர் : மதுரை

வெளியீடு: 178
முதற் பதிப்பு: ஜூலை '56
உரிமையுடையது

விலை ரூ. 1—0—0

107929

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார் சென்னை-1.

பதிப்புரை

இந்திய விடுதலையின் பின் வரலாற்றுத் துறையில் பல புதிய ஒளிகள் தென்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நதி முகங்களில் இருந்து அழிந்துபோன பேரூர்கள் பல தோண்டிக் காணப்பட்டுள்ளன.

நாகார்ஜுன அணைத்திட்ட வேலையோடு அந்தப் பள்ளத்தாக்கிலே மறைந்து கிடந்த 'விஜயபுரி' தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது. வரலாற்றில் தெளிவின்றிக் காணப்படும் இக்சவாகு மன்னர்களின் ஆட்சி பற்றியும், அந்நாளைய மக்களின் நாகரிகம், வாழ்வுமுறை பற்றியும் அறியும் ஆராய்ச்சி அங்கே நடைபெற்று வருகிறது. விகாரங்கள், மாளிகைகள், அரும்பொருள்கள், நாணயங்கள் பல அங்கேயுள்ள அரும்பொருள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. நாணயங்களில் சில அண்மையில் சென்னை அரும்பொருட்காட்சி சாலைக்கும் வந்தன.

காஞ்ஞெஜ், உஜ்ஜயினி என வடமொழி நூல்களிலும், சீனப் பயணக்காரரின் குறிப்புகளிலும் காணப்படும் இரு நகரங்கள் அண்மையில் தோண்டிக் காணப்பட்டுள்ளன.

ஆமதாபாத்துக்கு அணித்தேயுள்ள 'லோடால்' குன்று புதைபொருள் ஆராய்ச்சிக் காரரால் தோண்டப் பெற்று அங்கொரு பண்டைய நகரம் காணப்பட்டுள்ளது. சிந்து வெளி நகரங்களான ஆரப்பா, மொகஞ்சோதாரா வுக்கும் லோடாலுக்கும் நதிவழி வணிகத் தொடர்பிருந்ததென்றும், கண்டுபிடித்துள்ளனர். சிந்து வெளிப் பேரூர்களில் கண்ட 'டெரக்கோட்டா' பொருள்கள் எங்ஙனம் சுடப்பட்டன என அறியப்படாமல் இருந்தது. லோடால் கண்டபின், அங்கிருந்த காளவாய்கள் அவை சுடப்பட்ட விதத்தை அறிவித்தன.

மைசூர் வட்டாரத்திலும் புதை பொருள் ஆராய்ச்சி நடக்கிறது. ஆங்கே 5000 ஆண்டுகளுக்கு முந்திய மனிதர் பயன்படுத்திய கருவிகள் பல கண்டு பிடிக்கப்பட்டன.

தமிழகத்தில் குன்னத்தூரில் நடக்கும் புதைபொருள் ஆராய்ச்சிகள் 2500 ஆண்டுகளுக்கு முன்பு

மேலை நாட்டாரோடு தமிழகம் கொண்ட தொடர்பை அறிவிக்கின்றன.

இன்னும் இத்துணைக் கண்டத்தின் பல பகுதிகளில் புதை பொருள் ஆராய்ச்சி நிகழ்கிறது. நாம் பெருமைப் படுகிறோம். ஆனால்,

"நீரின் வந்தநிமிர் பரிப் புரவியும்
காலில் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்,"— (சிலம்பு)

வந்து வந்து நாடொறும் இறங்கிய ஒரு துறைமுகப் பட்டினம்; காவிரியும், கடலும் கலக்கும் இடத்திலே இருந்து கொண்டு காசினிமுழுதும் தன் கலங்களால் ஆட்சி செய்த ஒரு பட்டினம்; சிலம்பும், மணியும் அழகுறச் செப்பி நம்மைச் சிந்தனைக்கும், வேதனைக்குமுள்ளாக்கும் புகார்; யவனரும், சோனகரும் இன்னும் பல வெளிநாட்டாரும் உறைந்து சிறந்த காவிரிப்பூம் பட்டினம்; ஒரு பண்டைய தமிழ்ப் பட்டினம் கடலுக்குள் கிடக்கிறது.

அதன் பெருமையைக் காவியங்கள் சொல்கின்றன; கதைகள் சொல்கின்றன; கல்வெட்டுக்கள் சொல்கின்றன; வரலாற்றாசிரியர் பலர் சொல்கின்றனர்.

கடலுள் மூழ்கியுள்ள புகாரின் தங்கக் காசுகள் தரங்கம்பாடிக் கரையில் சில சமயங்களில் ஒதுங்குவதாகவும், மக்கள் அக்காலங்களில் தங்கத்தின் மேலாசையால் தரங்கம்பாடிக் கடற்கரையை மொய்க்கின்றனர் என்றும் கேள்விப் படுகிறோம்.

கடலாழ்ந்த புகாரின் அருகில் உள்ள சிற்றூரிலிருந்து பார்த்தால் சில காலங்களில் கடலுள் கட்டிட விதானங்கள் தெரிவதாகவும் அப்பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

ஆனால் கடலின் கோர வாயிலிருந்து புதையுண்ட அப்பட்டினத்தை மீட்க நமக்கு வழியில்லை.

மண்ணுக்குள் புதைந்திருந்தால் தோண்டிவிட முடியும். தமிழ் மண்ணின் இனிமையைச் சுவைத்துச் சுவைத்துச் சுவைகண்டு விட்ட கடலல்லவா அதைத் தன் வாய்க்குள் வைத்திருக்கிறது. சங்கங்கள் இரண்டை விழுங்கியும் அதன் பசி தீர வில்லையே! பூம்புகாரை விட்டுவிடுமா? யானை வாயில் போன கரும்புதானா காவிரிப்பூம் பட்டினம்?

சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழறிஞர் சிலர் புகாரைக் கடலின் வாயினின்று மீட்டுப் பார்க்க அரசினரிடம் முறையிட்டனர். ஆனால் அரசினர் வசதிகளும் வாய்ப்பும் இல்லையெனக் கூறிவிட்டனர்.

இன்றைக்குக் கடலுள் மூழ்க ஏற்பட்டுள்ள விஞ்ஞான வசதிகளின் மூலம் புகாரைப் பொருட்செலவு எதுவுமின்றி ஆராயலாம்.

'ஆக்குவா லங்' எனக் கடல் மூழ்கப் புதுக் கருவியொன்றை மேனாட்டார் கண்டு பிடித்துள்ளனர். 'மூழ்கு மணி' முறை போன்று இதில் வசதிக்குறைவு கிடையாது. 'ஆக்குவா லங்' முறை மூலம் மனிதன் நீருள் நெடுநேரம் இருக்கவும், கடலை ஆராயவும் முடியும்.

இக்கருவியின் மூலம் மேனாட்டார் அரிய செயல்கள் பல செய்துள்ளனர். பல ஆண்டுகளுக்கு முன் கடலுள் மூழ்கிய கலங்களை இப்போது அக்கருவியின் துணைகொண்டு மீட்கின்றனர்.

இக்கருவிக்குப் பெரும் பணமும் செலவிட வேண்டியிருக்காது. இக்கருவிகளை அணிந்து ஆராய்ச்சியாளர் ஆழ்கடலில் மூழ்கி ஆங்கே துயிலும் புகாரை ஆராய்ந்தால் தென்னகத்தின் வரலாற்றில் புதியதொரு ஒளி கிடைக்கும்.

தமிழ்ப் பெரு மக்களும், சென்னை மாநில அரசினரும் முயன்றால் இத்தொண்டு எளிதில் சித்திபெறும்.

கடல் கொண்ட அந்தப் பேரூரை நம் தலைமுறையில் ஆராய்ச்சியாளர் கண்டு நமக்கும், உலகுக்கும் உரைக்க ஒரு சிறிதேனும் இந்நூல் உதவுமானால் அதை நாங்கள் செய்த பெரும் பேறாகக் கருதுவோம்.

பதிப்பாளர்கள்.

உள்ளுறை

1.	பெயர் ஆராய்ச்சி	... 7
2.	பண்டு இருந்த இடம்	... 12
3.	காவிரி நதிச் சிறப்பு	... 15
4.	நகரத்துச் சிறப்பு	... 19
5.	நகரத்து அமைப்பு	... 31
6.	நகரமும் அரசியலும்	... 48
7.	நகரமும் மகளிரும்	... 57
8.	புகார் நகரமும் கலையும்	... 61
9.	மறைந்த நகரம்.	... 71

க

புகார்—பெயராராய்ச்சி

புகார் என்ற சொல்லிற்கு ஆற்று முகம் என்பது பொருளாகும். ஆற்று முகம் என்று பொருள்பட வந்த பொதுச் சொல், எவ்வாறு ஒரு நகரத்தைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாக மாறிற்று?

ஆட்டோ ஜெஸ்பர்ஸன் **(Otto)(Jesperson)**, வென்ட் ரீஸ் **(Vendryes)** முதலிய மொழிநூலார், எல்லாப் பொருள்களையும் சுட்டி வந்த ஒரு பொதுச் சொல் காலப் போக்கில் ஒரே ஒரு பொருளை மட்டும் சிறப்பாகச் சுட்டுதலுண்டு எனக் கூறுகின்றனர். அவ்வாறு நிகழுவதற்குப் பொருட் சிறப்புச் சுட்டல் (**Specialisation or Restriction**) என்பர். முன்பு இலத்தீன் மொழியில் 'பெலிஸ்' என்ற சொல் பெண்பால் மிருகங்கள் எல்லாவற்றையும் குறித்து வந்தது. காலப் போக்கில் அச் சொல் பெண்பாற் பூனையை மட்டும் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. அவ்வாறே ஆங்கில மொழியில் 'மீட்' என்ற சொல் பண்டு எல்லா வகையான உணவையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இருந்தது. **"What is one's meat is another's poison"** என்ற பழமொழியிலும் இப்பொருள்பட வந்துள்ளது நனி விளங்கும். அப்பொதுவான பொருள் மாறிச் சிறப்பாக அச்சொல் இன்று இறைச்சியையே குறித்து வருகிறது.

அவ்வாறே வடமொழியில் 'மிருகா' என்றசொல் முன்பு எல்லா மிருகங்களேயும் குறிக்கும் சொல்லாக இருந்தது. ஆனல் அவ்வழக்கு இன்று ஒழிந்து அச்சொல் சிங்கத்தையே குறிக்கும் சிறப்புச் சொல்லாக மாறிவிட்டது. இத்தகைய மாறுபாடுகளுற்ற சொற்கள் பல தமிழ் மொழியிலுண்டு. எடுத்துக்காட்டாகச் சில சொற்களே ஆராய்வோம்:

"ஐயர்" என்ற சொல் முன்பு சான்றோரை அல்லது தலேவரைக் குறித்து வந்த பொதுச்சொல்லாக இருந்தது.

"ஐயரும் தாம் பிழையார் தாம் தொடுத்த கோல்"

என்னும் கபிலரது குறிஞ்சிக் கலி வரியும்,

"கடல் புக்கு உயிர்கொன்று வாழ்வர் நின்னேயர்
உடல் புக்கு உயிர் கொன்று வாழ்வை மன் நீயும்"

என்னும் சிலப்பதிகாரம் கானல் வரியிலுள்ள வரிகளும் சான்ருக அமையும். ஆனல் இன்று ஐயர் என்ற சொல் தன் பொருளில் மாறுபட்டு ஓர் இனத்து மக்களேயே குறிக்கும் சிறப்புச் சொல்லாக மாறி இருக்கிறது. அவ்வாறே "மான்" என்ற சொல் முன்பு அரி, பரி, புலி, யானே முதலிய பல்வேறு மிருகங்களேக் குறிக்கும் பொதுச் சொல்லாக இருந்தது. ஆனல் இன்று 'மான்' என்ற அச் சொல் ஒரே ஒரு மிருகத்தை மட்டும் குறிக்கும் சிறப்புச் சொல்லாக மாறி இருக்கிறது. இத்தகைய மாறுபாடுகளேச் 'செய்யுள்,' 'அகராதி' போன்ற பல தமிழ்ச் சொற்கள் அடைந்துள்ளன. அவ்வாறே 'புகார்' என்ற பொதுச் சொல் காலப்போக்கி உ.

வாணிகத்தினல் சிறப்பெய்திய ஆற்று முகத்து நகர மான காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாக மாறி இருத்தல் கூடும்.

முற்காலத்தில் நந்தமிழ் நாட்டிலாறு கடலோடு கலக்குமிடத்தில் மிக்க சிறப்புடன் புகார் நகரமே யல்லாது பிறிதொரு நகரமும் இல்லை எனலாம். அதனல் சிறப்பு நோக்கி, புகார் என்னும் சொல்லையே அப்பொருளிற் கேற்ப அமைந்திருக்கும் நகருக்கிட்டனர் என்று கொள்ளுதல் சாலப் பொருத்த முடையதாகும்.

'புகார்' என்ற சொல் ஆற்று முகத்தைக் குறிக்கிறது என்பதற்குப் புறநானூற்றில் பயின்று வந்துள்ள வரியே போதிய சான்ருகும்.

"புகா அர்ப் புகுந்த பெருங்கலம்"

(புறம். 30)

"கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி"

(அகம். 110)

என்ற அகநானூற்று வரியிலும் புகார் என்ற சொல்லிற்கு ஆற்றுமுகம் என்றே பொருள் கொள்ளப் படுகிறது.

சுருங்கக் கூறின், காவிரியாறு கடலோடு கலக்கும் ஆற்று முகத்தில் சிறப்புடனிருந்த காவரிப்பூம் பட்டினத்திற்குப் புகார் என்ற பெயரையும் பண்டையோர் மறுபெயராக இட்டனர்.

கடற்கரையில் அமைந்திருக்கும் இடத்துக்குப் பொதுவாகப் பட்டினம் என்று பெயரிடுவதுண்டு. அம்

மாதிரியாகவே புகார், கடற்கரையில் அமைந்திருந்ததால் அதனைப் பட்டினம் என்றும் சிலர் அழைத்து வந்தனர்.

பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலையில்,* காவிரிப்பூம்பட்டினம், பட்டினம் என்றே குறிப்பிடப் படுதலாலும், காவிரிப்பூம் பட்டினத்தில் வாணிகர் குலத் திலகராய்த் தோன்றிப் பின்பு முற்றும் துறந்த பெரியார் பட்டினத்தார் என்ற பெயராலேயே இன்றும் அழைக்கப் படுதலானும், இன்று பட்டினம் என்பது சிறப்பாகச் சென்னைப்பட்டினத்தைக் குறிப்பது போன்று முன்னளில் காவிரிப்பூம் பட்டினத்தையே 'பட்டினம்' என்ற சொல் குறித்து வந்தது எனலாம்.†

ஐம் பெருங் காப்பியங்களி லொன்றான மணிமேகலை என்னும் காப்பியத்தின் பதிகத்தின் வாயிலாக, சம்பாபதி என்பது காவிரிப்பூம் பட்டினத்தின் பெயரென்றும், சம்பாபதி என்பது ஒருபெண் அணங்கின் பெயரென்றும், மிகப்பழங் காலத்தில் 'காந்தமன்' என்னும் சோழன் அகத்தியனை வேண்ட அம் முனிவன் தன் கரக நீரைக் கீழே கவிழ்த்தா னென்றும், அந் நீரே காவிரியாற்றின் தோற்ற மென்றும், அது பெருக்கெடுத்துக் குணதிசை நோக்கிச் சென்று 'சம்பாபதி' அயலிற் பாய்ந்தது என்றும் அதனைச்சம்பாபதி "வேணவாத் தீர்த்தவிளக்கேவா" என்று வரவேற்றா ளென்றும், அகத்தியன் காவிரியை நோக்கி' "தாயே! நின்னால் இவள் வழிபடுதற்குரியவள்" என்று கூறினன் என்றும், உடனே காவிரி சம்பாபதியைத்தொழுது நின்றாளென்றும் அப்பொழுது சம்பாபதி

---

*'முட்டாச் சிறப்பின் பட்டினம்' (பட்டினப்பாலை). 218.

†. ஊரும் பேரும்.— Prof. R. P. சேதுப்பிள்ளை. P P. 37-38.

"நான்முகன் ஆறு வகைத் தெய்வ கணப் பிண்டங்களையும், இருபது வகைப்பட்ட பிரம்ம கணப் பிண்டங்களையும் படைத்த அந்நாள் முதல் என் பெயர் கொண்டு வந்த இவ்வூர் இன்று முதல் நின் பெயர் கொண்டு விளங்குக" என்று கூறினளென்றும் அன்று முதல் சம்பாபதி நகரம் காவிரிப்பூம்பட்டினம் என வழங்கலாயிற்று என்றும் அறியப் பெறுகிறோம்.

மணிமேகலை பதிகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சி உண்மையோ அல்லது பொய்யோ என ஐயுற இடந்தருகிறது. ஆனல் புகார் நகரம், சம்பாபதி என்னும் பெயரில் அழைக்கப் பட்டிருக்கலாம் என்பது ஆதாரமற்றதன்று.

* ககந்தன் என்னும் வேந்தன் ஒருவன் புகார் நகரினின்று முன்பு அரசு புரிந்தமையின் இது 'காகந்தி' எனப் பெயர் கொண்டிருந்தது. வங்காளத்தின் தலைநகராகிய சம்பாபதியினின்று வந்து குடியேறிய தமிழர்கள் தம்முடைய பழைய நகரத்தை மறவாதிருத்தற் பொருட்டு இதனைச் சம்பாபதி என்று அழைப்பாராயினர். பெரிப்ளஸ், கமாரம் என்றும், டாலமி கபேரிஸ் என்றும் குறிப்பிட்டுள்ளது இந்நகரையே என்பது வரலாற்றுண்மை.

எனவே புகார் நகரம் சம்பாபதி என்றும், காகந்தி என்றும், காவிரிப்பூம் பட்டினம் என்றும் பெயருடைத்து எனலாம்.

---

*முதலாம் கரிகாலன்—திரு. L உலகநாதப்பிள்ளை. PP. 49-50

புகார் நகரம் பண்டு இருந்தஇடம்

* கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டாலமி என்பவர் காவிரிப்பூம் பட்டினத்தையும், காவிரி நதியையும் குறிப்பிடுவதனைக் காணலாம். † காவிரிப்பூம் பட்டினம் 128° 30', 15° 40' தீர்க்க அட்சரேகைகளில் அமைந்திருந்தது என்றும், காவிரி கடலோடு கலக்குமிடம் 129°, 15° 15' தீர்க்க அட்சரேகைகளில் அமைந்திருந்தது என்றும் எழுதியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட அளவுகள் செவ்வனே பொருந்தவில்லை. அவர் குறிப்பிட்ட அட்ச, தீர்க்க ரேகைகள் வங்காளக்குடாக் கடலின் ஒரு மூலையில் சந்திக்கின்றன. திண்ணமாக அங்குப் புகார் நகரம் இருந்திருக்க முடியாது எனப் பார்த்தவுடனே கூறலாம். தவிர டாலமியின் கருத்துக்கு வரலாற்றாசிரியர் ஒருவரும் இணங்கவில்லை. டாலமி குறிப்பிட்டுள்ள கணக்குகள் தவறானவை என்பது எம் கருத்து. அவர் வாழ்ந்த காலத்தில் அட்ச தீர்க்க ரேகைகள் இப்போது குறிப்பிடுவது போல அவ்வளவு பொருத்தமாகவும், திண்ணமாகவும் முடிவு செய்ய இயலாத நிலையில் இருந்தன எனக் கோடல் நேரிதாம்.

காவிரி கடலோடு கலக்குமிடத்தில் புகார் நகரம் இருந்தது என்று முன்பே பார்த்தோம். காவிரி நதி தஞ்சை மாவட்டத்தில் இன்றும் கடலோடு கலக்கிறது. அவ்விடம் சீகாழிக்குக் கிழக்கேயுள்ள நெய்தல் நிலப்

* 'Ptolemy mentions 'Khaberis' an emporium, which has been identified in the Kaverip-Pattinam. He mentions also the mouth of river 'Khaberis' which has been recognised as the mouth of the river Kaveri.

—Mc. crindle in Indian Antiquary Bombay.

XIII 332—333.

† Ptolemy gives 128° 30' and 15° 40' for Khaberis.

பகுதியாகும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் சிறப்பித்துக் கூறப்பட்ட சில கோயில்களும், கோட்டங்களும் அங்கு இன்றும் இருக்கின்றன. பாசண்ட சாத்தன் மாயக் குழவியாகி வளர்ந்தது புகார் நகருக்கு அருகேயுள்ள காப்பியக் குடி என்னும் பதியாகும் இதனை,

"காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து"
(சிலம்பு. **XXX.** 83)

என்ற சிலப்பதிகாரவரிகள் கூறுகின்றன. இன்று இக்காப்பியக் குடி, தஞ்சை மாவட்டத்திலுள்ள சீகாழிக்குக் கிழக்கே இருப்பது கண்கூடு. ‡ அங்குச் சாத்தனார் கோயிலொன்று இன்றும் நின்று நிலவி வருகிறது. § இன்னும் காவிரிப்பூம் பட்டினத்துக் கல் வெட்டுகள் அங்குத்தான் புகார் நகரமிருந்தது என்பதனை வற்புறுத்துகின்றன.

திரு. ஆராவமுதன் அவர்கள் காவிரியாறு எவ்வாறு தமது போககை மாற்றியிருக்க இயலும் என்பதனை விளக்குகின்றார். அதன் போக்கு எப்படி மாறு பட்டாலும், அது கடலோடு கலக்கும் இடத்தில் பெரிய மாறுதல் ஒன்றுமில்லை. இப்போது கடலில் கலக்குமிடத்திற்குச் சற்று வடக்கே பண்டு கழி முக மிருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

—"Ptolemy had worked out a system for the mouth of Khaberis. Howsoever we might frame a system of latitudes and longitudes and howsoever we might work it we cannot arrive at the results he gives for two places in such juxtaposition as we are accustomed to associate with Kaveri-p-pattinam and the mouth of Kaveri"

—"The Kaveri, the Maukharis and the Sangam Age" by T. G. Aramudan. M.A., B.L., L.T. PP. 62.

‡ A. R. E. 1919. part. 11. No. 2.

§ சாத்தனர் கோயில்கள்—சுந்தரேச வாண்டையார் (தமிழ்ப்பொழில். 1934 — '35). PP. 466.

சேரர்களின் தலைநகரமாகிய வஞ்சியைக் குறிப்பிடும்போது டாக்டர். சோமசுந்தர பாரதியார், திரு.-மு. இராகவ ஐயங்கார் முதலிய ஆசிரியர்களிடையே கருத்து வேற்றுமை தோன்றிற்று. ஆனால் சோழர்களின் தலைநகரமாக இருந்த காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிப்பிடுங்கால் அத்தகைய கருத்து வேற்றுமை இல்லை என்றே கூறலாம்.

* இக் காவிரிப்பூம் பட்டினத்திற்கு இன்று செல்ல வேண்டுமானால் மாயூரத்தினின்று செல்லலாம். மாயூரத்தினின்று காவிரிப்பூம் பட்டினம் செல்லும் பாதையில் பன்னிரண்டு கல் அளவில் கைகாட்டி மரம் ஒன்றிருக்கிறது. அதிலிருந்து கடற்கரை வரை ஒரே சாலை மூன்று கல் தொலைவில் போகின்றது. அவ்விடமே காவிரிப்பூம் பட்டினமாகும்.

‡ தரங்கம்பாடிக்கு வடக்கே காவிரிப்பூம் பட்டினம் இருக்கிறது என்று வரலாற்றாசிரியர் கூறுவர். அந்த இடமும் மேலே குறிப்பிட்டுள்ள இடமும் ஒரே இடத்தில் சந்திப்பதால் புகார் நகரம் இருக்குமிடத்தைக் குறித்துக் கருத்து வேற்றுமை இல்லை எனக் கூறலாம்.

பண்டு புகார் நகரம் கடலிலிருந்து மேற்கே நான்கு காதத்திலிருந்ததாக, புதுச்சேரிக்கு மேற்கேயுள்ள பாகூர்ப் பாறையிலுள்ள கல்வெட்டொன்றிலிருந்து அறியலாம். காதம் என்பது எத்தனை மைல் என்று முடிவாக இன்று கூற முடியவில்லை. இன்று கடலிலிருந்து மேற்கே சிறிது தூரமே புகார் சிற்றூராக இருக்கிறது. அதனை நான்கு காத அளவு என்று கொள்ளுதல் ஒவ்வாது. கடலிற்குள் நீண்ட நிலப் பரப்பு அழிந்து இருக்க வேண்டும். புகார் நகரத்தின் நீண்ட நிலப்பரப்பு இன்று கடலுக்குள் மறைந்திருந்தாலும் எஞ்சியுள்ள பகுதி பண்டைய புகார் நகரம் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டப் பயன்படுகிறது.

*. சோழர் வரலாறு—Dr. மா. இராசமாணிக்கம். PP.130.
‡ Colas—Prof. Nilakanda Sastri.

௫

காவிரி நதிச் சிறப்பு

புகார் நகரத்தை அழகுபடுத்தும் காவிரியாற்றின் சிறப்பை இனி நோக்குவோம்.

'கா' என்பதற்குச் சோலை என்பது பொருளாகும். இந் நதியின் கரைகளின் இரு மருங்கும் விரிந்த சோலைகள் இருப்பதால் காவிரி என்ற பெயரேற்பட்டது என்பர். இப்பொருள் பொருத்தமாக இருக்கிறது. காவிரியாறு கரும்புகள் நெருங்கிய கழனிகளையுடைய நாடுகளை வளமாக்கி நேர் கிழக்காக ஓடும் என்னும் கருத்தை,

'மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்கு கதழுறை யாலியொடு சிதறிக்
கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக் கொழுகுங் கலுழி மலர் நிறைக் காவிரி''
(பதிற்றுப்பத்து. 50)

என்ற வரிகள் இனிமையுடன் எடுத்துரைக்கின்றன.

''கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்கர லேற்றொடும்
தூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்

சூடமலைப் பிறந்த கொழும்பஃ றூரமொடு
கடல்வள னெதிரக் கயல்வாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஒலிறந் தொலிக்கும்"

(சிலம்பு. x. 102—109)

என்ற வரிகளும் காவிரியாற்றின் சிறப்பை எடுத்தியம்புகின்றன. இன்னும், பெரிய புராணம், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலும் இவ் யாற்றின் சிறப்பைக் காணலாம்.

காவிரியாற்றின் நீர், பண்டு நன்முறையில் பயன் படாமலிருந்தது. பிறகு கரிகாலன் அவ்யாற்றில் அணைகள் கட்டிக் கால்வாய்களின் வாயிலாக அந்நீரை நிலங்களுக்குப் பயன்படுமாறு செய்தான்.

(1) "தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும்"

(கலிங்கத்துப் பரணி, இராசபாரம்பரியம். 197)

(2) "சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்"

(விக்கிரம சோழனுலா—25—26.)

(3) "மண்கொண்ட பொன்னிக்கரைகட்ட வாராதான்
கண்கொண்ட கரிகாலன்."

(குலோத்துங்க சோழனுலா 35—36)

என்ற பாடல்களினால் காவிரியாறு பண்டு ஆழமிக்கதாக இருந்தது என்றும், வெள்ளம் அடிக்கடி மிகுந்து

வந்து ஊரைப்பாழாக்கியது என்றும், கரிகாற் சோழன் இதனைத் தடுக்கவேண்டித் தன்னுடைய சிற்றரசர்களுக்கு நிலங்களை அளந்து தந்து கரையைக் கட்டுமாறு கட்டளையிட்டான் என்றும், அவர்களும் அவ்வாறே செய்து முடித்தனர் என்றும், திரிலோசனன் என்னும் சிற்றரசன் மட்டும் அவன் கூறியாங்குச் செய்து முடிக்கவில்லை என்றும் அறியலாம்.

* கரிகாலன் கரையைக் கட்டி முடித்த பிறகு பற்பல வாய்க்கால்களையும், வடிமதகுகளையும் அமைத்துத் தண்ணீரை வேளாண் வாழ்க்கைக்குப் பயன்படுத்தினன். அவன் காலத்தில் விதைத்த விதைகள் மிகுந்த பயனைத் தந்தன என்பது

"ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு"

(பொருநராற்றுப்படை)

"கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப்பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றுக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே"

(பொருநராற்றுப்படை. 242—'48)

*The Epigraphist's Report. 1906. Sect. 4—
Large Leydon Grand Arch.

என்ற பாடல்களினல் விளங்குகின்றது. எனவே காவிரி யாற்றின் சிறப்பை உலகறியச் செய்த பெருமை கரிகாற் பெருவளத்தானுக்கே உரியதாகும்.

† கரிகாலன் என்னும் பெயர்கொண்ட சோழ வேந்தர் இருவர் இருந்ததாகத் தெரிய வருகிறது. ‡ திரு. ஆராவமுதன் கரிகாலன் இமயத்தின் மேல் படையெடுக்க ஏற்றதாக இருந்தகாலம் இன்னது என்பதனை வரையறுத்து விட்டுப் பின் இலங்கை வரலாறு முதலியனவற்றையும் ஆராய்ந்து, இறுதியாக இரண்டாங் கரிகாலனே காவிரிக்குக் கரைகட்டிமவன் என்றும் அவனது காலம் கி. மு. 60 முதல் கி. மு. 10 வரை யாகும் என்றும் எழுதி இருக்கிறார்.

* திரு. கே. என். சிவராஜப்பிள்ளை அவர்களும் இமயம் சென்ற கரிகாலன் இரண்டாம் கரிகாலன் என்றும், வெண்ணிக்குயத்தியாரால் புறநானூற்றில் பாராட்டப் பட்டவன் முதற்கரிகாலன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இரண்டாங் கரிகாலனே காவிரியாற்றின் சிறப்பைப் பாரெங்கும் பரப்பினன் என்று உறுதியுடன் கூறலாம்.

---

† Vide திருமாவளவன்—புலவர். கோவிந்தன்.

‡ The Sangam Age—Aramudan. M. A., B. L., B. T. pp. 56—'57.

*The chronology of the early Tamils-K. N. Sivaraja pillai pp—91—98.

புகார் நகரத்துச் சிறப்பு

கரிகாலன் காலத்தில்தான் புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினம் தோன்றிற்று என்பார் கூற்று உண்மையில் ஒவ்வாதது. * இயற்கை அழகில் ஈடுபட்டுப் புலவர்களெல்லாம் விரும்பியுறையும் உறைவிடமாகக் கவின் பெற்றுத் தொன்று தொட்டு இலங்கிய தொன்மைப் பதியாகவே புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் அமைந்து இருந்தது. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், உறையூரில் உறைந்திருந்த சோழன் பெருந்திருமா வளவனிடம் வந்து

"நீயே அறந்துஞ்சு உறந்தைப் பொருநனை"

(புறம். 58)

என்று பாடியிருப்பதை நோக்குமிடத்து உறந்தை சிறிய தலைநகராகச் சிறந்துவிளங்கியிருந்த போதே காவிரிப்பூம்பட்டினமும் கவின் பெற்ற கடற்கரை நகரமாக இருந்தது என்பது தெளிவாகும்.

காவிரிப்பூம் பட்டினம் என்ற பெயர் பண்டைய இலக்கியங்களில் யாண்டும் காணப்படாதது ஒரு புதுமையாகவே இருக்கிறது. † 1. மூதூர், 2. பெருநகர், 3. பேரூர்,

---

* காவிரிப்பூம்பட்டினம்—Dr மொ. அ. துரை. அரங்கசாமி. (An essay in the Madras University Annal) 1952

† (1) மணி 9 : 53. (2) மணி. 22 : 102. (3) மணி 7 : 26

4. பூம்புகார், 5. புகார், 6. காவிரிப்படப்பைப் பட்டினம், 7. காவிரிப்படப்பை நன்னகர் என எத்தனையோ வகையாக இத்தொன்னகர் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இப் பெயர்கள் எல்லாம் குழைந்து செம்பாகாய்த் திரண்ட தீஞ்சுவைக் கட்டியே காவிரிப்பூம்பட்டினம் என்ற சீரிய பெயர் என்று கூறலாம்.

இலக்கியங்களில் இப்பெயர் யாண்டும் இல்லை என்றாலும், சான்றோர் வழக்கில் இப்பெயரே நிலவிற்று என்பது தேற்றம். இதற்குச் சான்றுகள் உண்டு. ஊரடுத்து வழங்கும் இயற்பெயர்களாய காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கந்தனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் என்ற புலவர் பெயர் ஐந்தும் சிறந்த சான்றாக அமையும்.

இனி, புகார் நகரம் எவ்வாறு இலக்கியத்தில் புகழப்பட்டுள்ளது என்பதனை நோக்குவோம்.

சுவர்க்கத்திற்குள்ள புகழும், நாகருலகத்திற்கு உள்ள போகமும் புகார் நகரில் ஒருங்கே நிலைபெற்றிருந்தன என்று

> "நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
> போகநீள் புகழ்மன்னும் புகார் நகர்"

(சிலப்பு. I)

என்ற வரிகள் செப்புகின்றன. இன்னும்

---

(4) சிலப். 1 : 10 (5) அகநா : 110. 4, பதிற். 73.
(6) சிலப். 15 : 151. (7) மணி. 25 : 16.

"பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய முறைமையில் தொழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்"

என்ற வரிகளிலிருந்து பூக்கள் விரிந்த தோட்டங்களை யுடைய புகார் நகரம், பழைமையான ஊர் என்பதும், அம் மூதூரில் நடக்கின்ற விழா மக்களும் தேவரும் மகிழ்ந்து இன்புறும் சிறப்பினையுடையது என்பதும் விளங்குகின்றன. கண்ணகி வாயிலாகப் புகார் நகரத்து அரசியற் சிறப்பினை இளங்கோ அடிகள் வழக்குரை காதையில் எடுத்துரைக்கிறார்.

"எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார்"

(சிலம்பு. xx 51-56)

என்ற வரிகளால் புகார் நகரம் நீதி நெறியினின்று வழுவாத வேந்தராட்சியைப் பண்டு தொட்டே பெற்றிருந்தது என்பது தெரிய வருகிறது.

புகார் நகரத்தின் இயற்கை வளம் *காவிரிப்புனல் பரந்து பொன் கொழிக்கும் பல்லூர் நெடுஞ் சோணாட்டிற், கழி சூழ் படப்பையினையும், தண்டலையினையும், பொய்கைகளையும், ஏரிகளையும், தின்காப்பினையும், கோயிலை மாசூட்டுதற்குக் காரணமான அட்டிலினையும், சாலையினையும், பள்ளியினையும், குயில் துச்சிற் சேக்

*பத்துப்பாட்டு—Dr. உ. வே. சா. பதிப்பு! PP. 554.

கைக் காரணமான தாழ்காலினையும், பாக்கங்களையும், புறச்சேரியினையும், மூன்றிலினையும், விழவரு ஆவணத்தையும், மாக்கள் கலந்து இனிதுறையும் வளந்தலை மயங்கிய மறுகுகளையும், நன்னெஞ்சினோர் துவன்றிருக்கையினையுமுடைய காவிரிப்பூம் பட்டினம் எனப் பத்துப்பாட்டு உரையாசிரியரான 'உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க் கினியரால்' சுருக்கமாக வரைந்துணர்த்தப் பட்டுள்ளது.

இன்னும், புகார் நகரம் மதுரைக் கூல வாணிகன் சித்தலைச் சாத்தனாரால் மணிமேகலையில் எவ்வாறு புகழ்ந்து கூறப்படுகிறது என்பதனை நோக்குவோம்.

'மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை'யில் புகார் நகரம் சித்திரிக்கப் பட்டுள்ளது சிந்தித்து இன்புறத் தக்கதாகும். அறிவின் எல்லையைக் கடந்த புகார் என்னும் பூங்கொடி போன்ற நங்கை, பன்மலர் சிறந்த நன்னீர் அகழியைச் சிலம்பாகவும், புள்ளொலியைச் சிலம்பொலியாகவும் உடையயள். மதிலையும், மதில் உறுப்புக்களையும், மணிமேகலையாக உடையவள். கோட்டை வாயிலில் நிற்கும் தோரண கம்பங்களைத் தோள்களாக உடையவள். கற்பகத்தரு நிற்கும் கோயில் வச்சிராயுதம் நிற்கும் கோயில் ஆகிய இரண்டனையும் எதிரெதிர் ஓங்கிய நகில்களாக உடையயள். ஆத்திமாலை அணிந்த சோழர்கட்கு ஊழிகள் தோறும் அரண்மனையாகிய திருமுகத்தை உடையயள். கீழ்த் திசையில் தோன்றும் சந்திரனும், மேற்றிசையில் மறையும் ஞாயிறும் ஆகிய இரண்டு பொன் தோடுகளையுடையயள். இங்ஙனம் சூரியன் மறையும் மாலைப் பொழு

தில் காவிரிப்பூம் பட்டினம் என்னும் பூங்கொடி காட்சி பெற்றுக் கவினுற விளங்கினாள்.

திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணியில்

"பொன்னி னாகும் பொருபடை அப்படை
தன்னி னாகும் தரணி தரணியில்
பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலை துன்னாதன இல்லையே"

என்பதனால், பொருள் மிகுந்த நாடே புகழாலும், ஆற்றலாலும் சிறந்து விளங்கும் என்றார். அவர் கூற்று முக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது எனலாம். இதனை நன் குணர்ந்தே புகார் நகரம் வாணிகத்தினாலும், கைத்தொழிலினாலும் சிறப்புடன் விளங்கிற்று. வெளிநாட்டு வரலாற்றாசிரியர்களும் புகழுமாறு சிறப் பெய்தியது.

புகார் நகரத்தில்,

"கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்"

வாழ்ந்து வந்தார்கள் என்று சிலப்பதிகாரம் சாற்றுவதால் அவர்கள் பண்டு தொட்டே கலத்தால் கடல் கடந்து வாணிகம் செய்து பொருளீட்டினர் என்பது பெறப்படுகின்றது. இன்னும் பல்வேறு நாட்டவர்கள் வாணிகத்தின் பொருட்டுப் புகார் நகரத்தில் வந்து தங்கித் தமிழ் மக்களோடு வேற்றுமை யின்றி நன் முறையில் பழகினரென்பது

"கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"
(சிலம்பு. v. 11-12)

என்பதிலிருந்து தெரிய வருகிறது.

இவ்வாறு தமிழகத்தில் வந்து தங்கினயவனர்களின் அழகிய மாளிகைகள் கடற்கரையினருகில் அமைந்திருந்தன. அம் மாளிகையின் கண்ணே அழகிய நிலா முற்றங்களும், அணிகலன் அமைக்கும் அறைகளும் இருந்தன. அத்தகைய விண் அளாவிய மாளிகைகளில் மிகச்சிறிய சாளரங்களே அமைக்கப் பெற்றிருந்தன. மானின் கண் போன்ற சாளரங்களையுடைய மாளிகை யென்றும் "முகில் தோய் மாடத்துக் குறுங்கண் அடைக்கும் கூதிர்க்கால" மென்றும் கூறப்பட்டிருத்தலால் சிற்பநூலில் வல்லாரால் சிறப்பாகச் செய்யப்பட்டு மேகம் தோய உயர்ந்த மாடங்களிலும் சிறிய கண்களையுடைய சாளரங்களே அமைக்கப் பெற்றிருந்தன என்பது தெரிய வருகின்றது. மாளிகைகள் ஓடு, கற்றை முதலியவற்ருல் வேயப் படாது மூடு சாந்திட்டு நிலா முற்றங்கள் விடப்பட்டனவா யிருந்தன. அவை "வேயா மாடம்" எனப்பட்டன.

இன்னும் துறைமுகம் இருந்த இடத்தைக் கலங்களறிந்து வருவதற்காகக் கலங்கரை விளக்கம் புகார் நகரில் இருந்தது என்பதனை,

"இலங்கு நீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"
[சிலம்பு VI. 141]

என்ற வரியினின்று அறியலாம்.

வாணிக மக்கள் வாழ்ந்து வந்த துறைமுகத்தில் பல வகைச் சரக்குகளையும் பகுத்து உணர்த்துதற்குச் சிறு கொடிகள் ஆங்காங்கே நாட்டப் பெற்றிருந்தன என்பதனை,

"கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பில்
கூலமருங்கில் கொடி எடுத்து நுவலும்"

என்று சிலப்பதிகாரம், கடலாடு காதையில் எடுத்துரைக்கின்றார். தமிழ்நாட்டில் பண்டு வாணிகம்செய்யப் பட்ட பொருள்களைப் பட்டினப்பாலையிலுள்ள

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்"

என்ற வரிகள் விளக்குகின்றன. "காவிரியின் இரு மருங்கும், பட்டினத்தில் விளைக்கும் உப்பினை ஏற்றிக் கொண்டு போய் உள் நாட்டில் நெல்லுக்கு மாற்றிவரும் படகுகள் பந்தியில் கட்டப் படும் குதிரைகள் போல் தறிகளில் பிணிக்கப்பட்டிருக்கும். சோலைகளும், பொய்கைகளும், ஏரிகளும் பட்டினத்தில் அளவற்றன உண்டு. சோறுக்கும் சாலைகள் பற்பல அங்கே உண்டு. அவற்றில் சோறுவடித்த கஞ்சி ஆறுபோல் பாயும் ஏறுகள் ஒன்றோடொன்று பொருதலால் கஞ்சி சேறு

ஆகும். தேர்கள் ஓடுதலால் சேறு தூளியாகும். பின் அத்தூளி எழுந்து பரந்து சித்திரங்கள் எழுதப் பெற்ற வெண்ணிற மாளிகைகளைப் புழுதி படிந்த யானைகளைப் போல அழுக்கேறப் பண்ணும்.

நெருங்கி யிருக்கும் தேவாலயங்களில் பறக்கும் கொடிகளும், அங்காடிகளில் பறக்கும் கொடிகளும், ஆசிரியர்கள் வாது செய்யத் தூக்கிக் கட்டிய கொடிகளும்,பண்டம் ஏற்றிவரும் நாவாய்களின் பாய்மரங்களின் மீது ஏற்றப்பட்ட கொடிகளும், கள்ளுக் கடைகளில் கட்டப்பட்ட கொடிகளும், ஞாயிற்றின் கிரணங்கள் நுழைய மாட்டாதபடி செய்யும். கடலிற் காற்றால் வந்த புரவிகளும், வடமலையிற் பிறந்த சாம்பூநதம் என்னும் பொன்னும், பொதியிலிற் பிறந்த சந்தனமும், அகிலும், தென்கடலிற் பிறந்த முத்தும், கங்கையில் உண்டாகிய பொருள்களும், கடாரம் என்னும் பர்மாவிலிருந்து வந்த பொருள்களும், சீமை எனப்படும் அயல் நாடுகளிலிருந்து வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலிய பொருள்களும் அளந்து கூற முடியாத அளவில் ஆங்காங்கே குவிந்து கிடக்கும். கலங்கரை விளக்கம் கடலிற் செல்லும் கப்பல்கள், வழி தடுமாறி விடாதபடி உயர்ந்து நின்று அவற்றிற்குக் கரை யிருக்குமிடத்தைக் கரையாது கரைந்து விளக்கிக் கொண்டிருக்கும். சிறப்பாக வாணிகத் தொழில் இடைவிடாது நடைபெறும் பெருவாணிகத் துறையாக அஃது இருந்தது. கொள்வதும் மிகை கொள்ளாமல், கொடுப்பதும் குறை கொடாமல் இலாபத்தை வெளிப்படையாகக் கூறி விற்கும் பண்பாட்டினை யுடையவர் பட்டினத் துறைந்த வாணிகர் எனலாம்.

* இன்னும் புகாரில் யவனரும், மற்றைய அயல் நாட்டாரும் வெகுவாய்ப் போந்து வாணிகம் செய்த உண்மையை நன்கு உணர்த்தவல்ல பலவகைச் சான்றுகள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. காவிரிப்பூம் பட்டினத்திலும் மற்றும் அக்காலத்தில் துறைமுகப் பட்டினங்களாயிருந்த இடங்களிலும் அயல் நாட்டுப் பழையநாணயங்களும், காசுகளும் தரைணியின்று வெட்டியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராயும்போது பண்டைக் காலத்தில் தமிழகத்தில் யவனர் முதலிய அயல் நாட்டார் பெருந் தொகையினராய்க் குடியேறிப் பண்டமாற்றுச் செய்து வந்தமையால் அவர்கள் நாட்டு நாணயங்கள் இங்கு வழங்கலாயின என்பது இனிது விளங்கும். எனவே காவிரிப்பூம் பட்டினம் பண்டு வாணிகத்திற்குப் பெயர் பெற்ற இடமாக இருந்தது என்பது ஒருதலை. இனி அவண் நிகழ்ந்த சில கைத்தொழில்களை நோக்குவோம்.

பட்டு நூலானும், எலிமயிரானும், பருத்திநூலானும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியர் வாழ்ந்து வந்தன ரென்று குறிப்பிடப் படுவதிலிருந்து பண்டு நெசவுத் தொழிலைப் புகார் நகரத்து மக்கள் நன் முறையில் செய்து வந்தன ரென்பது விளங்குகின்றது. † கயிறு திரித்து விற்பவரும், வெண்கலக் கன்னரும், செம்பு கொட்டிகளும், மரத்தை வெட்டுந் தச்சரும், வலிய கையை உடைய கொல்லரும், குயவரும், உருக்குத் தட்டாரும், இ ர த் தி ன ப் பணித்

* சிலப்பதிகார விளக்கம்—R. P. சேதுப்பிள்ளை. PP. 91.

† அடியார்க்கு நல்லார்.(P P 153—155.) உ. வே. சா. பதிப்பு.

தட்டாரும், தையற்காரரும், உறைகாரரும், கிழி கிடை யென்பவற்றூற் புட்பம், வாடா மாலை, பொய்க் கொண்டை முதலிய உருப்பிறக்குந் தொழில்களை மிகுத்துக் காட்டிக் குற்றமற்ற கைத் தொழிலால் வேறு பட்ட இயல்புடையோரும், துளைக் கருவியானும், நரம் புக் கருவியானும், குரல் முதலாயுள்ள ஏழிசையினையும் சரிகமபதநி என்னும் ஏழு எழுத்தினையும் மூவகை வங்கியத்தினும நால்வகை யாழினும் பிறக்கும் பண் களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையும் குற்ற மின்றாக இசைத்துக் காட்டவல்ல பெறுதற்கரிய இசைமரபை யறிந்த குழலர், பாணர் முதலாய பெரிய இசைக்காரர்களும் தங்களுடைய தொழில்களைச் செவ் வனே செய்து வந்தனர். இன்னும் சிலர் இறைச்சி, பிட்டு, கள் முதலியனவற்றை விற்றும் மீன் பிடித் தும் வாழ்ந்து வந்தன ரென்ற செய்திகளைச் சிலப்பதி காரம் சிறக்க உணர்த்துகிறது.

இதனால் புகார் நகரத்தில் பலவகையான கைத் தொழில்கள் நிகழ்ந்தன் என்றும், மக்கள் பற்பல தொழில்களில் ஈடுபட்டு வாணிகம் செய்து பொருளீட் டின ரென்றும், அதனால் புகார் நகரம் பொருள் மிக்க நகரமாக இருந்தது என்றும் தெரிய வருகிறது. இன்று தேம்ஸ் நதிக் கரையிலிருந்து கொண்டு புகழோடு விளங் கும் இலண்டன்மா நகரத்தைப் போலப் புகார் நகரம் பண்டு இருந்தது எனலாம்.

* கி. பி. 80-ல் வாழ்ந்த பிளினி என்பாரது கூற்றி லிருந்து பல பொருள்கள் புகாரிலிருந்து ஏற்றுமதியா

*Pliny XXI. Kanagasabai Pillai's "Tamils' 1800 years ago"—PP. 25—32.

யின என்றும், பெரிய கப்பல்கள் துறைமுகத்திலிருந்தன என்றும் அறிய முடிகிறது. அவரது கூற்றை

"......................கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடற்பஃ றாரத்த நாடு"

(புறம் 30)

என்ற வரிகள் விளக்குகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த புகார் நகரத்தின் அமைப்பை இனி நோக்குவோம்.

இந்த நகரத்தின் இடுகாட்டின் சிறப்பினை மணிமேகலைக் காப்பியத்தினால் அறியலாம். இவ்விடு காட்டினைச் சக்கர வாளக் கோட்டம் என்பர் சான்றோர். ஒரு காளி கோட்டம் இங்கே உண்டு. இன்னின்னார், இன்னின்ன சாதி சமயத்தினர், இன்னின்ன இடங்களில் அடக்கம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை விளக்கிப் பற்பல கோட்டங்கள் இங்கே திகழ்ந்தன. மயானத் தெய்வங்கள் உறையும் தூண்கள் பல இருந்தன துறவிகளைத் தொழுவோர் ஓசை, பிணங்களை அடக்கம் செய்ய வருவோர் ஓசை; நரிகளின் கூக்குரல் ஓசை, செத்தோரை அழைக்கும் கோட்டான்களின் ஓசை முதலியன இரவும் பகலும் இங்கே கடலொலி போல் முழங்கிக் கொண்டிருக்கும். பேய்கள் வாழும் வாகை மன்றம், பறவைகள் தங்கும் வெள்ளில் (விளா) மன்றம், காபாலிகள் உறையும் வன்னி மன்றம், விரதத்தால் இளைத்த உடம்பையுடையராய்க் கழிந்தோரிடு

தலைகளை மாலையாகக் கட்டுவார் வாழும் இரத்தி (இலந்தை) மன்றம் பிணங்களைத் தின்போர் வாழும் வெள்ளிடை மன்றம், என்றஐவகை மன்றங்கள் இங்கே உண்டு. ஊழினால் மாண்டாரை எத்தெய்வமும் மீட்டல் முடியாது என்பதைக் கோதமை என்பாளுக்கு மெய்ப்பிக்கச் சக்கர வாளக் கோட்டத்துத் தெய்வங்களையெல்லாம் சம்பாபதித் தெய்வம் அழைக்க, அத்தெய்வங்களெல்லாம் வந்து உண்மை உணர்த்தியதற்குச் சான்றாக, இங்கே உலகின் நடுவே யுள்ள மேரு மலையும், அதனைச் சூழ்ந்த ஏழு மலைகளும், நான்கு பெருந் தீவுகளும், மற்ற இரு விசேடங்களும் ஆகிய இவற்றைப் புலப்படுத்தி ஆங்காங்கு உறைபவருடைய உருவங்களையும் மயன் என்பான் அமைத்து வைக்க, இவ்விடுகாடு சூழ்ந்த இடம் சக்கரவாளக் கோட்டம் என அழைக்கப் படுவதாயிற்று என்பர்.

௫

புகார் நகரத்து அமைப்பு

அக் காலத்தில் ஒவ்வொரு கடற்கரை நகரமும் இரு பாகங்களை யுடையதா யிருந்தது. அவற்றுள் ஒரு பாகம் ஊரெனவும், மற்றொரு பாகம் பட்டினம் எனவும் அழைக்கப் பெறும். பண்டு சேர நாட்டில் சிறந்திருந்த முசிரி என்னும் பட்டினமும் இரு பாகங்களாகவே அமைந்திருந்தது. அவற்றுள் ஊர் எனும் பெயருடைய பாகம் கொடும்பாளூர் எனவும், மற்றொரு பாகம் மாகோதைப் பட்டினம் எனவும் வழங்கியதாகத் தெரிகின்றது. அவ்வாறே காவிரிப்பூம் பட்டினம் இரு பாகங்களை யுடையதா யிருந்தது. அவ்வூரின் ஒருபாகம் மருவூர்ப் பாக்க மென்றும், மற்றொரு பாகம் பட்டினப் பாக்க மென்றும் பெயர் பெற்றது. இரண்டும் சேர்ந்து காவிரிப பூம் பட்டினம் எனப்பட்டது. மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கத்திற்குக் கிழக்கில் இருந்தது. இவ்விரு பாகத்திற்கு மிடையில் எழில் மிக்க பொழிலொன் றிருந்தது. இதனை நாளங்காடி என்று அழைத்து வந்தனர். இனி ஒவ்வொரு இடத்தின் கண்ணுள்ள சிறப்பினை நோக்கு வோம்.

மருவூர்ப்பாக்கத்திற் கடற்கரையை யொட்டிக் கண்ணைக் கவரும் அழகுடைய யவனர் இருப்பிடங் களும், மற்றும் வாணிகத்தின் பொருட்டுப் பல நாடுகளி லிருந்தும் வந்தோர் கலந்து வாழும் இருப்பிடங்களும்,

விளங்கின. வண்ணம், சுண்ணம், சாந்தம், பூ முதலியன விற்போர் திரியும் நகர வீதியும், பட்டுச்சாலியர் இருக்குமிடங்களும், நவமணிகளும், பொன்னும் பொற்பணிகளும் விற்கும் மறுகுகளும், கூலக் கடைத்தெருவும், வெண்கலக் கன்னார், செம்பு கொட்டிகள், தச்சர், கொல்லர், தட்டார் முதலியவர்களும் குழலினும் யாழினும் ஏழிசைகளும் வழுவின்றிசைக்கும் பாணர்களும், ஏனோரும் உறையுமிடங்கள் ஆண்டிருந்தன; அது

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதா மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண் போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கள்ளொடை யாட்டியர்
மீன் விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோ

டோசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்பு செய்கு நரும்
மரங்கொ∴ தச்சருங் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன் கலந்தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினுங் கிடையினுந் தொழில் பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களுங்
குழலினும் யாழினும் குரன் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும் பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறு குறுங் கைவினைப் பிறர் வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்.''

(சிலம்பு. v. 7-39)

என்ற வரிகளினின்று இனிது புலனுகின்றது.

பட்டினப் பாக்கத்தில் அரசு வீதியும், கொடித் தேர் வீதியும், பீடிகைத் தெருவும், வாணிகர் மறுகும், மறையோர் இருக்கையும், வேளாளர் வீதியும், மற்றும் மருத்துவர், சோதிடர், சூதர், மாகதர், கூத்தர், நாழிகைக் கணக்கர், கணிகையர் முதலாயினேர் இருக்கைகளும், யானை, தேர், குதிரைகளைச் செலுத்துவோரும் கடுங் கண் மறவரும் புறஞ் சூழ்ந்திருக்கும் இருக்கைகளும் திகழ்ந்தன. அது,

''கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோர் இருக்கையும்

வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில் தொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்
இருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்"

(சிலம்பு. v.-40-58)

என்ற வரிகளினின்று விளங்குகின்றது. இங்குத்தான் மகதச் சிற்பரும், மராடக் கொற்றரும், யவனத் தச்சரும் கூடிக் கண்ணைக் கவரும் முறையில், வனப்புடன் செய் தமைத்த அரசன் கோயிலிருந்தது.

இவ்விரு பாக்கங்களுக்கு மிடையே சோலைகளின் மரங்களே கால்களாகக் கட்டப்பட்ட நாளங்காடி என் னும் கடைத்தெரு இருந்தது.

இவ்விடம் இளங்கோ அடிகளால்,

"இரு பெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியி னிடைநில மாகிய

கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி''

(சிலம்பு-v. 60-64)

என்று சித்திரிக்கப் பட்டுள்ளது.

இதனால், வாணிகர் பலர் கடைவைத்து வாணிகம் செய்து வந்தனர்; அதனால் மக்கள் நடமாட்டம் மிகுந்திருந்தது என்பதும் விளங்குகின்றது.

அந் நாளங்காடியில் காவல் பூதத்திற்கென்று பலி பீடிகையும் உயிர்ப் பலி வழங்கும் முழுப் பலி பீடிகையும் இருந்தன. அந் நாளங்காடியிலுள்ள பூதத்திற்கு மறக்குடிமகளிர் பூ, பொங்கல் முதலியன சொரிந்து குரவை ஆடி அரசனை வாழ்த்திச் செல்வர்; பின்னர் மருவூர் மருங்கின் மறங்கெழுவீரரும், பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும் முந்தச் சென்று "வேந்தன் கொற்றங்கொள்க" எனக் கூறி முரசு முழங்க உயிர்ப் பலியிடுவர் என்பது தெரிய வருகிறது. மேலும் புகார் நகரில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம் நெடுங்கல் மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் என ஐவகை மன்றங்க ளிருந்தன என்று சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியலாம். இனி இவ்வைவகை மன்றத்தின் சிறப்பினைப் பற்றி அடியார்க்கு நல்லார் எடுத்து இயம்புவதனை நோக்குவோம்.

*அளவும், நிறையும் எண்ணுமாகிய, இலக்கங்கள் தம்மிடத்து இடப்பட்ட பெயர் பொறித்த பொதிகள்

*. சிலப்பதிகாரம்- உ. வே. சா. பதிப்பு. P P. 163-164

பண்டகசாலை வாயிலையும், பற்றுயத்துக் கருந்தாழாகிய காவலையும் உடையோர் காத்திருக்கும் காவலையும் விடப்பட்ட வாகலான் இந்நகர்க்குப் புதிய மாக்கள் சிலர்கட் போருள ராயின் அவர்கழுத்துக் கடுக்கப் பொதியை வைத்து ஊரைச் சூழ்விப்ப னல்லாது அவர்க்கே அவற்றைக் கொடுத்து விடாதாதலாற் களவென்பதனை மனத்தாற் கனவில் நினைப்பினும் நினைப்போரை நடுங்குவிக்கும் வெளியான இடத்தை யுடைய மன்றமே வெள்ளிடை மன்றமாகும்.

கூனர் முதலாயுள்ளோரும் தொழுநோயால் அழுகு மெய்யையுடையோரும் புக்கு முழுகின—வளவிலே பழுதில்லாத தோற்றத்தை யுடைய நல்ல திறம் பெறும் வகையினுலே தன்னை வலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கையை யுடைய மன்றமே இலஞ்சி மன்றமாகும். வஞ்சனையாற் சிலர் மருந்தூட்ட வுண்டு பித்தேறினுரும், நஞ்சையுண்டு நடுங்கு துயர முற்றேரும், அழலும் விடத்தை யுடைய அரவின் வாயிற் கூர்த்த எயிறழுந்தக் கடியுண்டாரும், பிதுங்கின கண்ணை யுடைய பேய்ப் பிடிக்கப் பட்டாரு மென்னும் இவர்கள் ஒருகாற் சூழ்வந்து தொழ அதனுடனே அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக் கால்வதொரு நெடியகல் நாட்டி நிற்கும் மன்றமே நெடுங்கல் மன்றமாகும்.

“தம்மைப் பிறர் நம்புவதற்குத் தவவேடத்தில் மறைந்து நின்று அத்தவத்திற் கிழுக்கானவற்றின் கண் ஒழுகும் பொய் வேடத்தாரும், தம்மைத் தன் கணவர் நம்புவதற்குப் பொய் யொழுக்கத்தின் மறைந்து நின்று வசிகரிப்பின் ஒழுகும் அவலற் பெண்டிரும்,

தம் படை, குடி முதலிய ஐந்தினெடு உயிருறுப் புரிமைக் குத் தம்மைத் தேறி அளித்த அரசரைக் கீழறை எண்ணும் அமைச்சரும், தம்முடைய மனைவியர் தனிப்பத் தனித்த பிறர் மனைவியரை விரும்பும் துச்சாரிகளும், தமது நெஞ்சறி பொருளை வஞ்சித்துப் பொய்ச்சான்று ஏறுவாரும், சிறப்புச் செய்துழி உழை நின்று புகழ்ந்து அவர் புறக் கொடையிற் பழிதூற்றுவாருமாகிய இவர்களே என் கையிற் கொண்ட இப் பாசத்திடத்து அகப்படும் பெயரென அவ்வூர் நாற்காத எல்லையும் கேட்கும்படி, தனது கடிய குரலாலுணர்த்திப் பின் அங்ஙனம் செய்வோரைப் பாசங்கட்டி வரநிலத்திற் புடைத்துண்ணும் பூதம் நிற்றலான் பூதசதுக்கமென அம்மன்றம் பெயர் பெற்றது.

இனி இறுதியாக பாவை மன்றத்தின் சிறப்பினை நோக்குவோம். அரசருடைய செங்கோல் சிறிது கோடிற்ருயினும் தரும நூன் முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார் உரைக்கும் நடுவு நிலைமை கோடி ஒரு மருங்கு பற்றினும் நாவாற் கூருது நீருகுத்துக் கண்ணுற்கூறும் பாவை நிற்றலான் பாவை மன்றம் என்ற பெயரைப் பெற்றது.

இவ்வைவகை மன்றத்திற்கும் பலியிட்டனர் என்பது,

"மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி யுறிஇ"
(சிலம்பு—V. 139—140)

என்ற வரிகளிலிருந்து புலனுகின்றது.

இன்னும் புகார் நகரத்தில் அரும் பெறல் மண்டபங்களிருந்தன. அவை எப்படிக் கிடைத்தன என்பதனை நோக்குவோம். கரிகால் வளவன் வட நாடு சென்று இமயத்தில் புலி பொறித்து வருங்கால் அவனுக்கு வட வேந்தர் நிருமித்த மண்டப வகைகளே அரும் பெறல் மண்டபங்களாகும். இவற்றை இனிதாக சிலப்பதிகார ஆசிரியர் எடுத்தியம்புவது உள்ளி மகிழற் பாலதாகும்.

வடநாட்டாரிட மிருந்து பெற்றுக் கொண்டு வந்த முத்துப் பந்தர், பட்டி மண்டபம், தோரண வாயில் என்பன வற்றின் சிறப்பை

"மாநீர் வேலி வச்சிர நாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர் நீங்கு சிறப்பினவர் தொல்வோர் உதவிக்கு
மயன் விதித்துக்கொடுத்த மரபின இனவதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோர் ஏத்தும்
அரும் பெறன் மரபின் மண்டபம்"

(சிலம்பு—V—99—110)

என்ற வரிகள் விரித்துரைக்கின்றன.

இனிப் புகாரில் பல்வகைக் கோயில்களும், கோட்டங்களும், குளங்களுமிருந்தன. வச்சிரக் கோட்டம், வெள்யானைக் கோட்டம், கற்பகக் கோட்டம், செங்கதி

ரோன் கோட்டம், மாசாத்தான் கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம் முதலாகப் பல கோட்டங்க ளிருந்தன.

கோயில்களும் பல இருந்தன என்பதனை, பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ் வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி நெடி யோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்'' என்ற வரிகளிலிருந்து நன்கறியலாம்.

இனி, புகார் நகரத்தின் கண்ணே இருந்த சோலை களைப் பற்றி மணிமேகலை என்னும் காப்பியத்தின் 'மலர் வனம் புக்க காதை' யின் வாயிலாக அறியலாம். புகார் நகரில் பல சோலைகளிருந்தன; ஆயினும் அவற் றுள் பல அனுகுதற்கு உரியவை அல்ல. இலவந் திகை என்னும் சோலை அரசர்க்கு உரியது. அதில் யந்திரவாவி இருந்தது. அச்சோலையில் அரசன் உழை யோர் இருப்பர். ஆதலின் அச்சோலையில் செல்ல இயலாது. அடுத்தது உய்யான வனம்; அதில் மனித ரால் விரும்பப்படாது தேவரால் மட்டுமே விரும்பப் படும் வண்டுகள் மொய்க்கப் பெறாத மலர்களை யுடைய மரங்கள் நிறைந்திருந்தன.

அவை வாடாத பூமாலைகளைத் தூக்கி நிற்றலால், 'இவ்வனம் பாசக் கயிற்றை யுடைய பூதங்களால் காக்கப் படுகின்றது போலும்' என்றெண்ணி அறிவுடையோர் அவ்வனத்தை அடையார். கதிரவன் சூட்டால் சிறகு களை இழந்த 'சம்பாபதி' இருந்த சம்பாபதி வனமும், காவிரிப்பாவையின் தாதையாகிய கவேர முனிவன்

பெயர் கொண்டு விளங்கும் கவேர வனமும், மனிதர் செல்லத் தக்கவை அல்ல. அவற்றுள் மக்களைத் தீண்டி வருத்தும் தெய்வம் உண்டென்பர். ஆதலால் அறிந்தோர் அங்குச் செல்லார். எஞ்சி இருப்பது உவவனம் ஒன்றே. அஃது,

"அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்
ஒரு பெரும் பூட்கையும் ஒழியா நோன்பில்
பகவன தாணையில் பன்மரம் பூக்கும்"

இயல்புடையது. அங்குப் பளிக்கறை மண்டபம் ஒன்றுண்டு. அது தன்னுட் புகுவோர் செய்யும் ஓசையை வெளிச் செல்ல விடாது. உருவத்தை மட்டுமே வெளிக் காட்டும். அம் மண்டபத்தில் புத்தனது பதுமபீடமிருந்தது. அப்பீடத்தி லிடப்படும் அரும்புகள் மலரும் தன்மை பெற்றிருந்தன. பல யாண்டுகள் கழியினும் அதிலிடப்பட்ட மலர்கள் வாடாமலிருந்தன. அவற்றில் வண்டுகள் மொய்யா. ஒரு தெய்வத்தின் அடிகளை வணங்கி, மலர்களைப் புத்த பீடத்திற் சேர்ப்பின் அம் மலர்கள் அப்பீடத்திலிருந்து நீங்கி, அக் குறிப்பிட்ட தெய்வத்தின் அடிகளிற் சென்று சேரும் என்று நம்பப் பட்டது. ஓர் எண்ணமின்றிப் பீடத்தி லிடப்படும் மலர்கள் பல யாண்டுகள் கழியினும் அவ்விடத்தை விட்டு நீங்கா என்றும், அப்பீடம் மயன் என்னும் தெய்வத் தச்சனால் செய்யப்பட்டது என்றும் கூறப்படுகின்றன.

மணிமேகலை, "பளிக்கறை புகுந்த காதை"யில் புகார் நகரத்தின் சோலை ஒன்றினைச் சாத்தனார் சித்திரிப்பதனைக் காணலாம். இருட் கூட்டம் சூரியனுடைய ஒளிக் கதிர்களாகிய சேனைக்கு அஞ்சி இச் சோலையில்

ஒளிந்து கொண்டிருக்கிறது என்று காண்போர் கூறத் தகும் செறிந்த இருளை யுடையது.

அவ்வனத்துள் தும்பிகள் வேய்ங்குழலைப் போல இசையைத் தருகின்றன. வண்டுகள் யாழ்போல் ஒலிக்கின்றன. மயில்கள் நடனம் செய்கின்றன. அந்நடனத்தை மந்திகள் மரக்கிளைகளிலிருந்து காண்கின்றன. தெளிந்த நீருள்ள அச்சோலையின் கண்ணேயுள்ள குளத்தின் நடுவில் மலர்ந்துள்ள தாமரைகளின் இடையில் உயர்ந்து தோன்றும் ஒரு மலரில் அரச அன்னம் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கின்றது. அந்நடிப்பிற் கேற்பச் சம்பங்கோழி முழவு போல ஒலிப்பதும் மரக்கிளைகளில் குயில்களிருந்து கூவுதலும் இன்பந்தரத் தக்கன. மலர்களின் மகரந்தத் தூள் தரையில் வீழ்ந்து கிடக்கின்றது. தாமரையின் மீது கயல் மீன்கள் பாய்ந்து துள்ளுவதனைக் கண்டு சிச்சிலிப் பறவை அதனைப்பற்ற முயன்று கிடைக்கப் பெறுமல் வருந்துகின்றது" என்றிவ்வாறு பொழிலும் பொய்கையும் சித்திரிக்கப் படுகின்றன.

புகார் நகரில் பண்டு, குராமரம், வெண் கடப்பமரம், குருந்த மரம், கொன்றை மரம், மஞ்சாடி மரம், மகிழ் மரம், வெட்சி மரம், நாரத்தை மரம், சுர புன்னை மரம், புன்னை மரம், குட்டிப்பிடவம் என்னுங் கொடி, செம்முல்லைக் கொடி தாழைச் செடி வெட்பாலை மரம், மூங்கில், அசோக மரம், செருந்தி மரம், வேங்கை மரம், சண்பக மரம், இலவ மரம், தான்றி மரம், ஒடுவை மரம், உழிஞ்சல் மரம், கான்றை மரம், சூரை மரம், கன்னி மரம் முதலிய பலவகையான

மரங்களும் கொடிகளும் நிறைந்திருந்து பூம்பொழிலைச் சிறப்பித்தன.

சோலையின் மேலைச் சுவரில் உள்ள சிறு வாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை அடைய முடியும். அதனை மக்கள் சுடுகாட்டுக் கோட்டமெனக் கூறிவந்தனர். அச்சுடுகாட்டினுள் துருக்கை கோயில் ஒன்று இருந்தது. அச்சுடுகாடு நாற்புறமும் வாயில்களை யுடைய மதிலாற் சூழப்பட்டது. அந்நான்கனுள் ஒன்று தாமேறிவந்த தேரை வனத்திலேயே சித்திரம் போல் நிற்க வைத்துத் தேவர்கள் நுழைந்து செல்லும் வாயி லென்றும், பிறிதொன்று, நெல்லும், கரும்பும், நீரும், சோலையும் அழகாக எழுதப்பட்டிருக்கும் வாயிலென் றும், வேறொன்று சுண்ணச் சாந்தினால் உருவங்கள் பல செய்து வைக்கப்பட் டிருக்கின்ற வாயிலென்றும், மற்றொன்று மடித்த செவ்வாயினையும், விழித்த கண்களையும், பிறரைப் பிணித்தற்குரிய கயிற்றையும் பிடித்துள்ள சூலத்தையும் உடைய பெரும் பூதம் நிற்கின்ற வயிலொன்றும் புனைந்து எழுதப்பட்டிருக் கின்றன.

அம்மயானத்தில் பலவகை மன்றங்களிருந்தன. பேய்கள் நெருங்கியுள்ள வாகை மரம் நிற்கும் மன்றங்கள், நிணத்தை இறைச்சியோடு தின்று களித்துப் பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்கள், காபாலிக சமயத்தவர் வாழும் வன்னி மரம் நிற்கும் மன்றங்கள், விரதத்தால் இளைத்த யாக்கையுடைய சிலர் உடைந்த தலைகளை மாலையாகக் கட்டும் இலந்தை மரம் நிற்கும் மன்றங்கள், பிணங்களை உண்போர் களித்து வாழும்

வெளியான இடங்களையுடைய மன்றங்கள் முதலிய மன்றங்கள் அவண் இருந்தன.

சுடுகாட்டில் கொள்ளிச் சட்டிகளும், மண்டைகளும், பாடைகளும், அறுபட்ட மாலைகளும், நெல்லும், பொரியும், உடைந்த குடங்களும், சிறுபலியாக இடப்பட்ட அரிசி வகைகளும் எங்கும் சிதறிக் கிடந்தன என்றறியப் பெறுகிறோம்.

சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்புறத்துள்ள சிறுவாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை யடைந்து அதற்கு அருகே ஒரு புறத்திலிருந்த 'உலக அறவி'யையும் பண்டு காணலாம். உலக அறவியில் சம்பாபதி கோயிலின்கண் கிழக்கே உள்ள தூண் ஒன்றனில் தெய்வ கணத்தோனை "துவதிகன்" என்பவனது வடிவம் போல மயனால் செய்யப்பட்ட பாவை ஒன்றிருந்தது. அது முக்கால செய்தியையும், கேட்போருக்குக் கூறும் இயல்புடையது. அது "நாவுடைப் பாவை" என்றழைக்கப்பட்டது.

"மன்னன் வளவன் மதிற்புகார் வாழ் வேந்தன்"
(சிலம்பு ஆய்ச்சியர் குரவை 'உள்வரிவாழ்த்து')

என்ற வரியினால் புகார் நகரத்தைச் சூழ்ந்து பெரிய மதிலொன்று இருந்தது என்று தெரிய வருகிறது. அதற்கு மேற்கில் பெரிய வாயிலிருந்தது. அதனை 'உலக இடைகழி' என்று கூறுவர். அதற்கும் அகநகர் மதிற் வாயிற்கு மிடையில் மணிவண்ணன் கோயில் ஒன்று இருந்தது. அதனை வலங் கொண்டு சென்று உலக இடைகழி நீங்கிச் சிறிது தொலைவு சென்றால் இலவந்திகைப் பொழிலைக் காணலாம். இதனை இளங்கோவடிகள்,

"தலையி லாளன் காமர் வேனிலொடு
மலைய மாருதம் மன்னவற் கிறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்திகை"

என்று இயம்புகிறார். எயிலைச் சுற்றிக் கொண்டே மேற்கு நோக்கிச் செல்லும் பெருவழி காவிரியின் வடகரையைச் சார்ந்து போகின்றது. புலிக்கொடி உயர்ந்து புகார் நகரில் சிறப்புடன் பறந்தது.

திருஞான சம்பந்தர் காலத்தில் பல்லவனீச்சுரம் என்ற கோவில் புகார் நகரிலிருந்தது என்பது,

"பட்டினத்துறை பல்லவன் ஈச்சரம்" என்ற சம்பந்தர் தேவாரத்திலிருந்து தெரிய வருகிறது. * பல்லவன் ஈச்சரத்துக்கு ஏறத்தாழ அரைமைல் மேற்கே சாய்க்காடு என்னும் சிற்றூர் உண்டு. அங்குள்ள கோயில் அப்பர், சம்பந்தர் பாடல்கள் பெற்றது. நகரத்திற்கும் இக்கோயிற்கு மிடையில் பழைய காலத்தில் காடு இருந்தது என்பது 'சாய்க்காடு' என்ற பெயரானே அறியலாம்.

இன்னும் சிலப்பதிகாரத்தின் 'கனாத்திற முரைத்த காதை'யிலிருந்து, காவிரி தன் நீரைக் கொண்டு சென்று கடலோடெதிர்த்து அலைக்கும் சங்க முகத்தயலதாகிய பூவினிதழ் அவிழும் நெய்தற்கான விடத்து இரண்டு தடாக மிருந்தன. அவை யாவை யெனிற் சோமகுண்டம் சூரிய குண்டம் என்னும் பெயரையுடையன. அவற்றின் துறைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்திற்புக்கு

* 'பெரிய புராண ஆராய்ச்சி' Dr. மா. இராசமாணிக்கம் P P. 220

அவனைத் தொழுதாராயின் அவர் "இப் பிறப்பிலுள்ள நாளெல்லாம் தம் கணவரோடும் பிரிவின்றி யிருந்து இவ்வுலகத்து இன்பமுறுவர்; மறுமைக்கும் போக பூமியிலேயும் போய்ப் பிறந்து கணவரோடும் பிரிவின்றி மூன்று பல்லங்காலம் இன்பம் நுகர்வர்" என்று நம்பி வந்தனர்.

இத்தகைய சிறப்பினையுடைய பொய்கைகளும், பொழில்களும், மன்றங்களும் இன்னோரன்ன பிறவும் புகார் நகரில் இருந்தன என்று நூல்களில் குறிப்பிட்டிருக்கின்றன. அவை முற்றிலும் உண்மை என்று கோடல் ஒருகாலும் ஒவ்வாது.

எடுத்துக் காட்டாக புகார் நகரின் கண்ணே இருந்த மன்றங்களின் சிறப்பும் பெருமையும் நம்பத் தகாத முறையில் விரித்துக் கூறப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட மன்றங்கள் அனைத்தும் மணிமேகலையில் கூறப்படவில்லை. அவ்வாறே மணிமேகலையில் கூறப்பட்ட பொய்கைகள் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை. தவிர இளங்கோ அடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் காவிய நயத்திற்காகப் பலவாறாகப் புனைந்து எழுதி யிருக்கின்றனர். சங்க காலத்தில் இல்லாத சில இலக்கியப் பண்புகள் இளங்கோ அடிகள் காலத்தில் தோன்றின எனலாம்.

மணிமேகலை பறந்து சென்றதும், தெய்வம் தூக்கிச் சென்றதும் நகைப் பேற்படுமாறு செய்கின்றன. இன்னும் பலவகையான புனைந்துரைகள் இவண் இருக்கின்றன.

காவியம் நன்னெறி புகட்டல் வேண்டும் என்ற இலக்கணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு பல வற்றைப் புனைந்து எழுதப்பட்டிருக்க வேண்டும் சிலப் பதிகாரம்.

“அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூவும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருவத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்”
(சிலம்பு. பதிகம். 55-60)

என்ற வரிகளிலிருந்து அதன் குறிக்கோள் இனிது விளங்குகின்றது.

இன்னும் புகார் நகரத்தின் மன்றங்களையும் ஏனை யவற்றையும் சிறப்பித்துக் கூறி மக்கள் மாட்டு நன்னெறி விளங்கச் செய்வதற்காகவே அச்சந் தரும் வகையில் சிறப்பித்திருக்கிறார் எனலாம். மேலும் இளங்கோ அடிகள் வெளிப்படையாகவே காவியம் படிப்பவர்க்கு நன்னெறி புகட்டுவதனை,

“தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்

அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்''

(சிலம்பு—(வரந்தரு காதை) 185-201)

என்ற வரிகளிலிருந்து நன்கறியலாம்.

இன்னும் இம்மாதிரியாகவே கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரும் புனைந்தெழுதி யிருப்பவை மக்களுக்கு நன்னெறி புகட்ட வேண்டும் என்னும் குறிக்கோளினால் தான் எனலாம்.

எனவே புகார் நகரத்தில் பலவகையான மன்றங்களும், பொய்கைகளும், பொழில்களும் மிகுந்து இன்பந் தருமுறையில் இருந்தன என்று கோடல் பொருத்தமுடையதாகும். காப்பியங்களில் புனைந்து கூறப்பட்டவை முழுதும் உண்மையானவை என்பது ஒருகாலும் ஒவ்வாது.

ஐ

புகார் நகரமும் அரசியலும்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

(திருக்குறள்-385)

என்ற திருவள்ளுவரின் முது மொழிக்கேற்ப புகார் நகரத்தை அரசர்கள் ஆண்டு வந்தனர். மக்களும் "நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பதனை உள்ளி அரசனுடன் ஒத்துழைத்து வாழ்ந்து வந்தனர்.

அரசனுக்கு நிலவரி, சுங்கவரி, வென்ற அயல் நாட்டுப்பொருள் என்ற இவை செல்வமாக இருந்தன. இவ்வாறு பெற்ற செல்வத்தைச் சோழ வேந்தர்கள், புகார் நகரில் வைக்கவில்லை. குடந்தையில் தான் அரச பண்டாரத்தை வைத்திருந்தனர் என்பதனை

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதி."

(அகம். 60)

என்ற வரிகள் விளக்குகின்றன.

புகார் நகரத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்த பண்டங்களை யெல்லாம் பாதுகாத்து அவற்றிற்குக் கடமை இவ்வள வென்றும் வரம்பறுத்துச் சோழ வேந்தன் அடையாளமான புலி முத்திரையிட்டுச்

சுங்கங்கொள்வோர் தம் தொழிலில் மாறுபடாது செய்து வந்தனர். வாணிகர் தாம் கொடுக்கல் வாங்கல் செய்யும் பண்டப் பொதிகளிலே அவற்றின் நிறை, அளவு, எண் இவற்றை எழுதிச் சாலைகளி லடுக்கி வைத்துப் பின்பு எடுத்துச் செல்வர் என்பது,

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலும் கருந்தாழிக் காவலும்"
(சிலம்பு. xxvi. 13-16)

என்ற சிலப்பதிகார வரிகளால் அறியலாம்.

புகார் நகரத்தில் வாணிகர் மூட்டைகளிலே கண் ணெழுத்திடப் படும். * கண்ணெழுத்து என்பதனை

"இருபதினாயிரம் கண்ணெழுத்துப் படுத்தன"
"கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்"
(சிலம்பு. v. 112)

என்ற வரிகள் விளக்குகின்றன. இதனால் அளவும், நிறையும் எண்ணுமாகிய இலக்கங்கள் பொதிகளி லிடப்பட்டன என்பது பெறப்படுகின்றது.

பண்டமாற்று முறையிலும் புகார் நகரத்தில் வாணிகம் நடந்தது. வாணிகர் தாம் கொள்ளுஞ் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்டு மிகையாகக் கொள்ளாது தாம் கொடுக்குஞ் சரக்கையும் தாம் வாங்கும் பொருட்டுக் குறையாகக் கொடுக்காமல் இலாபத்தை வெளியாகக் கொடுப்பரென்பது,

---

* ஆராய்ச்சித்தொகுதி (கண்ணெழுத்து) மு. இராகவ ஐயங்கா.

"கொடு மேழி நசை யுழவர்
நெடுநுக்கத்துப் பகல்போல
நடுவு நின்ற நன்னெஞ்சினேர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம்
—குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் தொல்கொண்டித்
—துவன்றிருக்கை.
(பட்டினப்பாலை **205-212**)

என்ற பட்டினப் பாலை வரிகளால் அறியலாம்.

அரசன் முத்திரையாகிய புலி இலச்சினை யிட்டுச் சுங்கங் கொண்டு நாவாயில் வந்தனவற்றைக் கடலி னின்று கரையில் இறக்குதலும், கரையிலே கிடந்த பொருளை மரக்கலத்தில் ஏற்றுதலும் செய்திடுமாறு ஏற்றுமதி, இறக்குமதிகள் ஓய்வின்றி நடைபெற்று வந்தன. ஏற்றுமதி இறக்குமதிகள் அல்லும் பகலும் நடை பெற்று வந்தமையின் காவிரிப்பூம் பட்டினம் அற்றை நாளிலே மிகப் பெரியதோர் வாணிக நகரமாக சிறந்து விளங்கியது என்பது

"நல்லிறைவன் பொருள் காக்கும்
தொல்லிசைத் தொழில் மாக்கள்
காய் சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைல்தொறும் அசைவின்றி
உல்கு செயக் குறை படாது
வான் முகந்தநீர் மலைப்பொழியவும்

மலைப் பொழிந்தநீர் கடற் பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர் பரப்பவும்
அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லடங்கிறேன்
புலிபொறித்து புறம்போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்
பொதி மூடை.'' (பட்டினப்பாலை. **120-137**)

107929
MADRAS

என்ற வரிகளினின்று புலனாகும்.

பண்டு புகார் நகரத்தை யாண்ட சோழ வேந்தர்க்கு அரச இலச்சினை புலியாகும். அவர்கள் புலிக் கொடி உடையவர்கள். * இடைக் காலத்தில் தெலுங்க நாட்டில் ஒரு பகுதியை ஆண்ட சோழர் சிங்க இலச்சினையைப் பெற்றிருந்தனர். ஆனால் புகார் நகரத்தை யாண்டவர் புலி இலச்சினையே கொண்டிருந்தனர் என்று பழந்தமிழ் நூல்களிலிருந்து அறியலாம்.

அரசனுக்கு உதவியாக ஐம்பெருங் குழுவும், எண் பேராயமும் இருந்தன. அமைச்சர், தானைத் தலைவர், தூதுவர், புரோகிதர், சாரணர் என்போர் கொண்ட அவை ஐம்பெருங் குழு எனப்படும். கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் கொண்ட அவை எண்பேராயம் எனப் பெயர்

* Ep. Indica. Vol. 11. PP 338.

பெறும். அரசன் ஐம்பெருங் குழுவுடனும், எண்பேரா யத்துடனும் கலந்தாலோசித்து அரசியலை நடத்தி வந்தான்.

இவையன்றி மன்ற மென்று ஒன்றுண்டு. இஃது ஊரவை என்றும் அழைக்கப் பட்டு வந்தது. இது நீதி மன்றப் பணியிலீடுபட் டிருந்தது எனலாம். ஊரவை யார் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற அளவில் அறிய முடிகிறதே யல்லது விரிவாக விளங்க வில்லை. † பிற்காலக் கல் வெட்டுகள் இம் முறையை நன்கு விரித்துரைக்கின்றன.

மணிமேகலை, புகார் நகரத்தில் சிறை வைக்கப் பட்ட செய்தியை "மணிமேகலை" என்னுங் காப்பியத் தின் வாயிலாக அறியலாம். சிறைச்சாலை, சிறைக் கோட்டம் என்று அழைக்கப்பட்டு வந்தது.

* இன்னும் சிறைச்சாலையில் கொலைக் குற்றம், மற்றைய குற்றம் செய்தவரை அரசன் பிறந்த நாளன்று விடுதலை செய்வதுண்டு. இது வெள்ளணி எனவும் பெருமங்கலம் எனவும் கூறப்படும்.

போரில் தன் வலியைக் காட்டிய பெருவீரன் "ஏனாதி" என்னும் பட்டம் பெற்றான். அரசன் அப் பட்டத்தைத் தந்து அவ்வீரனைப் பெருமைப் படுத்தல் மரபு. அச் சிறு விழாவில் பட்டம் பெற்றவன் பொற்பூ, மோதிரம் முதலியன பெறுதல் மரபு. சேனைத் தலை வர்க்கு ஏனாதி என்ற பட்டம் அளித்தல் போன்றே

† Uttarmerur Inscriptions.

* Cholas—N. M. V. Nattar—PP. 101—102.

அமைச்சர், கணக்கர், வேளாளர் முதலாயினோர்க்குக் காவிதி என்ற பட்டமும், வாணிகர்களுக்கு எட்டி என்ற பட்டமும் அளித்து அதற்கடையாளமாகப் பொன்னாற் செய்யப்பட்ட பூவினை அளிப்பர்.

புகார் நகரத்தில் யாண்டு தோறும் அரசன் பிறந்த நாளை விழாவாகக் கொண்டாடுவர். இன்னும் சித்திரை மாதத்துச் சித்திரை நாளிலே கொடியேற்றி இந்திர விழாவைச் சிறப்பாக ஒவ்வொரு யாண்டும் நடத்தி வந் தனர். அவ்விழாவைக் காண பல அயல் நாட்டவர்கள் புகார் நகரின்கண் வந்து தங்கினர். இந்திர விழாக் கொண்டாடாமல் விட்டு விட்டால் புகார் நகரம் அழிந்து போகும் என்று அஞ்சினர். அவ்விழாக் கொண்டாடப் படுவதற்குக் காரணமும் இருக்கின்றது. அதாவது சோழன் ஒருவன் வானத்தில் தொங்கிக் கொண்டிருந்த மதில்களை அழித்த காரணத்தால் "தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்" எனப் பாராட்டப்பட் டான்.

அச்சோழன் அகத்தியன் கட்டளைப்படி இந்திர னைக் குறைபிரந்து வேண்டிக் காவிரிப்பூம் பட்டினத் தில் இருபத்தெட்டு நாள் இந்திர விழா நடத்தவும் அவ் விழாவில் இந்திரன் அருளவும் வரம் பெற்றான். அவன் காலமுதல் யாண்டுதோறும் இந்திர விழா நடைபெற்று வந்தது. இஃது "இந்திர கோடணை" எனவும், "இந்திர கோடணை விழா" எனவும், "ஆயிரங் கண்ணோன் விழா" எனவும், "தீவகச் சாந்தி" எனவும் வழங்கும்.

இந்திர விழாவை வேந்தன் ஆணைப்படி முரசறைந்து ஊருக்கு அறிவிப்பர். வச்சிராயுதம் நிற்கும்

கோயிலில் மணங்கெழு முரசம் இருந்தது. அதனை அலங்கரிக்கப்பட்ட யானையின் பிடரி மீது ஏற்றித் தேரும், மாவும், களிறும் தன்னைச் சூழ்ந்துவர முதுக் குடிப் பிறந்தோன் யானையின் மீதமர்ந்தவனாய் "திரு விழை மூதூர் வாழ்க! வானம் மும்மாரி பொழிக! மன்னவன், கோள்கள் நிற்கும் நிலை குலையாமைக்குக் காரணமாகிய செங்கோலினன் ஆகுக! தேவர்கள் இவண் வருவர். ஆதலால் தோரணம் கட்டத்தகும் வீதிகளிலும், சபைகளிலும், பூரணகும்பம், பாலிகைகள், பாவை விளக்குகள் இவற்றைப் பரப்புக! குலைக்கமுகும், வாழையும், வஞ்சியும், பூங்கொடிகளும், கரும்பும் நடுக! திண்ணைகளிலும், தூண்களிலும், வரிசை வரிசையாக முத்து மாலைகளை முறையே நாற்றுக! மூதூர் வீதிகளிலும் எல்லோரும் தங்கும் மன்றங்களிலும், மரத்தடிகளிலும் பழ மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புக! மாடங்களையும், வீட்டு வாயில்களையும் பலவகைப்பட்ட துகிற் கொடியால் அணி செய்க! மணற் பந்தர்களிலும் அம்பலங்களிலும் 'தரும பதம்' அறிந்தவர்கள் சொற்பொழிவாற்றுவார்களாக! சமயவாதிகள் பட்டிமண்டபத்தில் ஏறிப் பேசுவார்களாக!" என்று பறையறைந்தான்.

இதனால் இக்காலத்தில் அரசாங்கத்தாரால் கொண்டாடப் படும் குடியரசு விழா போன்று முன்னாளில் புகார் நகரத்தில் இந்திர விழா இனிது கொண்டாடப் பட்டதெனலாம்.

புகார் நகரத்திலிருந்த அரசனது மாளிகையில் அன்றாடம் உதய காலத்தில் ஒற்றை வலம்புரிச் சங்கம் ஒலித்தது. திருச்சின்னம், எக்காளம், பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின. 'மணிமேகலை'யின் ஏழாவது

காதையிலிருந்து, அரசன் கோயிலில் நாழிகை வட்டி லால் நாழிகை அறிவோர் இருந்து வந்தனர்; அவர்கள் நாழிகையை மக்களுக்கு ஓசை செய்து அறிவித்தனர் என்று தெரிகிறது. இன்னும் புகார் நகரத்து அரசிய லார் ஊர்களினுள்ளே வரும் பெரும் வழிகளைக் காக் கும் பொருட்டு வில் வீரர்களை வைத்திருந்தனர் என்பது "பட்டினப்பாலை" யிலிருந்து அறியலாம்.

இன்னும் புகார் நகரத்தில் பண்டு அளவைகள் நன் முறையில் குறிப்பிடப்பட்டிருந்தன. நிலங்கள் கோலால் அளக்கப்பட்டன. ஒரு கோல் பதினாறு சாண்; பதினெட்டு கோல் கொண்டது ஒரு குழி; இரு நூற்றைம்பத்தாறு குழிகள் கொண்டது ஒரு மா; இருபது மா கொண்டது ஒரு வேலி.

இனி, தானிய அளவையை நோக்குவோம். இரண்டு செவிடு ஒரு பிடி; ஐந்து செவிடு ஓர் ஆழாக்கு; இரண் டாழாக்கு ஓர் உழக்கு; இரண்டு உழக்கு ஓர் உரி; இரண்டு உரி ஒரு நாழி; எட்டு நாழி ஒரு குறுணி; இரண்டு குறுணி ஒரு பதக்கு; இரண்டு பதக்கு ஒரு தூணி அல்லது ஒரு காடி; மூன்று தூணி ஒரு கலம்.

இனிப் பொன் அளவையை நோக்குவோம். ஒரு மஞ்சாடி இரண்டு குன்றி; இருபது மஞ்சாடி ஒரு கழஞ்சு. (அறுபத்தெட்டு முதல் எழுபத்திரண்டு தானிய எடை) அஃது என்ன தானியம் என்று உறுதியாகக் கூற முடியவில்லை.

இன்னும் நீட்டல் அளவையை நோக்குவோம். எட்டுத் தோரை ஒரு விரல்; பன்னிரண்டு விரல் ஒரு சாண்; இரண்டு சாண் ஒரு முழம்.

இவ்வகையாகப் பண்டு புகார் நகரத்தில் அளவை களிருந்து வந்தன என்றறியலாம்.

புகார் நகரத்து மக்கள் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்றினர். அரசனோ அவனைச் சார்ந்தவர்களோ குறிப்பிட்ட ஒரு மதத்தையே பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. புகார் நகரத்து வேந்தன் ஏனைய மதத்தினரோடு நட்புடனிருந்தான் என்றும் அறியலாம். * மகா வம்சத்தின் மூலம் புகார் நகரத்தை யாண்ட சோழ வேந்தர்கள் புத்த மதத்தைப் பின்பற்றுபவராக இல்லாவிட்டாலும் புத்த சந்நியாசிகளுடன் கேண்மையுடனிருந்தனர் என்றறியலாம். **இன்னும் அசோக மன்னனுடைய கல்வெட்டுகளால், பிறமதங்களைப் பரப்ப தம்முடைய நாட்டில் சோழர்கள் அனுமதித் தந்தனர் என்றறியப் பெறுகிறோம். எனவே "மத சுதந்திரம்" புகார் நகரில் இருந்தது எனலாம்.

இவ்வாறு புகார் நகரத்தில், மக்கள் இன்பமாக வாழ்வதற்காக பல வகையான நன்மைகள் அந் நகரை யாண்ட வேந்தர்களால் செய்து தரப்பட்டன.

---

* Mahavamsa XXI (21—26) 'Mahavamsa' Edited and Translated by Geiger (Pali Text Society) Continued in C. V.

** Asoka's edict. V XIII.

புகார் நகரமும் மகளிரும்

புகார் நகரில், மகளிரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர் என்பதற்கு மாதவியைச் சுட்டிக் காட்டலாம். அவள், ஆடல், பாடல் முதலியவற்றில் தேர்ச்சியடைந்து சிறந்து விளங்கினுள். தவிர அவள் தன்னை விட்டுப் பிரிந்த கோவலனுக்கு, ஓர் அழகிய தாழைப்பூவின் தோட்டில் பித்திகையின் மூகையாகிய எழுத்தாணியால் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து வருந்தி வரைந்த ஒரு கடிதத்தைத் தன் தோழியாகிய வசந்த மாலையிடம் கொடுத்து முதன் முதலில் அனுப்புகிருள். பின்பு மீண்டும் மறையவனிடம் கொடுத்தனுப்பும் மடல்,

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்"

என்று தொடங்குகின்றது. அது நன்முறையில் சீரிய பண்பாட்டோடு எழுதப்பட்டிருத்தலைக் காணலாம். அக் கடிதம் மகளிர் முற்காலத்தில் சிறந்த புலமையுடனும், பண்பாட்டுடனும் இருந்தனர் என்பதனை விளக்கும். பெண்பாற் புலவர்களான ஆதிமந்தியும், வெள்ளி வீதியாரும், குறமகள் இளவெயினியும், காவற்பெண்டும், காக்கை பாடினியார், நச்செள்ளையாரும் பெற்றிருந்த புலமையைப் பெண்டிர் கொண்டிருந்தனர் என்று கூறல் தவறன்று.

புகார் நகரத்து மகளிர் கற்பு நெறியினின்று வழுவாமல் கணவனையே தெய்வமெனக் கருதி வாழ்ந்து வந்தனர். பிறதெய்வங்களையும் வணங்கத் தயங்கினர் என்பதற்குக் கண்ணகியின் வாழ்க்கையே சான்றாகும்.

தான் தீக்கனாக் கண்டவுடன், அதனைத் தன் பார்ப்பனத் தோழி தேவந்தியிடம் கூறினாள். அதற்குத் தேவந்தி,

> "காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
> தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
> போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
> ஆடுதும்"
>
> (சிலம்பு—**IX**—60—63)

என்றாள். அதற்குக் கண்ணகி மறுத்து, அது பீடன்று என்று கூறி அவள் கூறிய மொழிக்கு இணங்கவில்லை. இந்நிகழ்ச்சி அவள் ஏனைய கடவுளர்களைத் தொழாமல் கணவனையே தெய்வமெனக் கருதி வந்த உயர்ந்த பண்பாட்டை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

புகார் நகரத்துச் செல்வ மகளிர் அணிந்த அணிகலன்களை நோக்குவோம். மாதவி, கோவலனுடன் கடல் விளையாட்டுக் காண விரும்பி அங்குச் செல்லும் பொழுது அவள் அடிமுதல் முடிவரை அணிந்திருந்த அணிகளை யெல்லாம் ஆசிரியர் இளங்கோ அடிகள் எடுத்துக் கூறியுள்ளார். அப் பகுதியிலிருந்து நாம் பண்டைய மகளிர் அணிந்த பல வகையான அணிகளை அறிய இயலும்.

"மெல்லிய விரல்களில் மோதிரம், பீலி முதலிய அணிகளை அணிந்தாள். கால்களில் பாதசாலமும்,

பாடகமும், சதங்கையும் அழகுற அணிந்தாள். நீலநிறம் அமைந்த அழகிய ஆடை புனைந்து அதன்மேல் முத்துக் கோவை முப்பத்திரண்டால் செய்த விரிசிகை என்னும் கலையை யணிந்தாள். கண்டோர் விரும்பும் கண்டிகையோடு முத்து மாலையையும் தோளில் அணிந்தாள். வயிரமும், மாணிக்கமும், வரிசையாய் அழுத்திய அழகிய சூடகமும், பொன் வளையலும், மணி வளையலும், சங்கவளையலும், பவள வளையலும் முன்கையில் அணிந்தாள். வாய் திறந்த வாளை மீன் போலப் பொன்னாலமைந்த நெளியையும், மத்தியில் சிவப்பும் மாணிக்கப் பீடமும் வளைவில் வயிரமும் பதித்த நல் மோதிரத்தையும் மெல்லிய விரல்களில் அணிந்தாள். இன்னும் பொன்னாலாகிய சங்கிலித் தொடரும், சவடியும், சரப்பளியும், முத்தாரமும் அழகிய கழுத்தில் அணிந்தாள். முகப்பில் இந்திர நீலமும் இடையிடையே வயிரமும் பதித்த நீலத்தோடு, அவளது நீண்ட காதில் நின்று ஒளி செய்தது. கருமையாகிய கூந்தலில் அருமையான தொழில் அமைந்த தலையணிகளை அழகுற முடித்தாள்'' என்று ஆசிரியர் கூறும் அணிகள் மகளிர் முற்காலத்தில் அணிந்ததையாகும்.

சிலப்பதிகாரத்தில் "அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை''யால், மகளிர், மேனியைச் சந்தன குழம்பு, குங்குமம் முதலியவைகளால் அலங்கரித்துக் கொண்டனரென்றும், தொய்யில் எழுதிக் கொண்டன ரென்றும், நறுமணங் கமழும் நீர்மையில் அமைத்துக் கொள்ளக் கருதிய மகளிர், பத்துவகைப்பட்ட வாசனைப் பொருளாலும் ஊறிக்காய்ந்த நன்னீரில் தோய்ந்து நனைந்த கூந்தலின் ஈரத்தை வாசனைப் புகையில் உலர்த்தியும் சவ்

வாது பூசி நலங்கிளர் மேனியோடும் திகழ்ந்திருந்தனர் என்றும் தெரிய வருகிறது. உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த மகளிரைத் தோழியர்கள் அலங்கரித்தனர் என்பதும் தெரிய வருகிறது.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏழ்மையான மகளிரது வாழ்க்கை அவ்வளவு ஆடம்பரமான முறையிலில்லை எனலாம். எளிய உடைகளையும், அணிகலங்களையுமே அணிந்தனர்.

குழந்தை பெற்ற மகளிர் வேப்பிலை, வெண் சிறு கடுகு, தூபம் இவற்றை ஏந்திய மகளிருடனே சென்று குளத்தில் நீராடுவர் என்றும் தெரிய வருகிறது.

இன்னும் புகார் நகரத்து மகளிரைப் பற்றிய பல குறிப்புக்களைப் பழந்தமிழ் நூல்களில் காணலாம்.

௮

புகார் நகரமும் கலையும்

புகார் நகரத்தின் கண்ணே இயற்றமிழும், இசைத் தமிழும், நாடகத் தமிழும் சிறப்புடன் விளங்கின எனலாம். ஓவியக்கலையும், சிற்பக்கலையும் இன்னோரன்ன பிறகலைகளும் தலைசிறந்து விளங்கின.

முதன் முதலாக இயற்றமிழ் இனிது விளங்கியதனை ஆராய்வோம். புகார் நகரத்தையாண்ட சோழன் கரிகாலன் போன்ற வேந்தர்கள் பெரு முயற்சியுடன் இயற்றமிழைப் பாதுகாத்து வந்தனர். தன்னையும், தன் வீரத்தையும் செங்கோன் முறைமையையும், காவிரிப்பூம் பட்டினத்தையும் சிறப்பித்துப் பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாக நல்கி அவரியற்றிய பட்டினப் பாலையைக் கொள்வானாயினன் என்ற ஒன்றினாலேயே புகாரை இனிதாக ஆண்ட வேந்தனுக்கு இயற்றமிழ் மாட்டு இருந்த விருப்பம் இனிது விளங்குகின்றது.

இன்னும் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், உருத்திரங் கண்ணனார், மருத்துவன் தாமோதரன், இரும்பிடர்த்தலையார், முடத்தாமக் கண்ணியார், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் முதலிய புலவர்கள் புகார் நகரத்தையும் அதனை ஆண்ட கரிகாலனையும் சிறப்பித்துப் பாடிய பகுதிகள் உண்மையில் இயற்றமிழ்ச் சிறப்பைச் சித்திரிக்கின்றன என்றே

கூறுதல் வேண்டும். புகாரில், புலவர்களின் கல்வித் திறமையைச் சீர்தூக்குதற்குப் பட்டிமண்டபத்தையும், பலநூல்களைக் கற்றுச் சிறந்த நல்லாசிரியர் ஒருங்கு சேர்ந்து பொருளாராய்ச்சி செய்து இன்புறத்தக்க கலைக் கழகங்களையும் அமைத்து இருந்தனர் என்பது

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
றுறழ்குறித் தெடுத்தவுரு கெழு கொடி"

(பட்டினப்பாலை. 169—171)

என்ற வரிகளிலிருந்து நன்கு விளங்குகின்றது. இதனல் புகாரில் இயற்றமிழ், தழைத்து வளர்ந்து வந்தது என்பதும், வேந்தனும் அதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனன் என்பதும் பெறப்படுகின்றன.

இசைக்கலை இனிது விளங்கிற்று என்பதனை "அரங்கேற்றுக் காதை" யினின்று நாமறிய இயலும். அக்காலத்தி லிருந்த இசைக் கருவிகளும் அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையினின்றறிய முடிகிறது; அகமுழவு, அகப்புற முழவு, புற முழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு, நாள் முழவு, காலை முழவு என ஏழு வகையாற் பகுக்கப்படும். பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண் விடு தூம்பு, நிசாலம், துடுமை சிறுபறை, அடக்கம், தருணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி பெரும்பறை முதலிய தோற் கருவிகளும், வங்கியம், குழல் என்னும்

துளைக்கருவிகளும், பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்னும் நரம்புக் கருவிகளும் பிறவும் இருந்தன.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையாலும் பிறக்கும் பண் விகற்பங் களும், பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண் ணூற்றொன்றாகிய இசைகளும், தமிழ்ப் பாணர்களால் அறிந்து பாடப் பெற்று வந்தன. இன்னும் இசை யாசிரியனின் அமைதியை ஆசிரியர் இளங்கோ அடி கள்,

"யாழுங் குழலுஞ் சீரு மிடலும்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இலக்கித்
தேசிகத் திருவின் ஓசைகடைப் பிடித்துத்
தேசிகத் திருவின் ஓசை எல்லாம்
ஆசின் உணர்ந்த அறிவின னாகிக்
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்
பகுதிப் பாடலும் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன்".

(சிலம்பு III 26—36)

என்பனவற்றால் விளக்குகின்றார்.

இன்னும் 'கானல்வரி'யில் இசைக் கலையை இளங்கோ அடிகள் சித்திரிப்பது நோக்கற் பாலது.

அதாவது காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் யாழினைத் தொழுது வாங்கிய மாதவி பண்ணல் முதலிய எண் வகையாலும், இசையை எழுப்பி, வார்தல் முதலிய எட்டு வகை இசைக் கரணத்தாலும் ஆராய்ந்து செவியால் ஓர்த்துப் பணியா தெனக் கூறி, கோவலன் கையில் யாழினை நீட்ட அவன் வாங்கி ஆற்றுவரியும் கானல் வரியுமாகிய இசைப்பாட்டுக்கள் பலவற்றை யாழிலிட்டுப் பாடினான் என்று சித்திரிக்கப்பட்டுள்ளன. இசைக்கலை பண்டு இனிது இருந்தது என்பதற்குக் காட்டாக அமையும். இன்னும் யாழ் முதலிய இசைக் கருவிகளின் இலக்கணம் ஈங்கு எடுத்து இயம்பப் படுவதினின்று புகார் நகரத்தில் இசை மணம் எங்கும் பரந்து வீசியது எனலாம்.

இனி நாடகக்கலை பண்டு புகாரில் இருந்த நிலையை ஆராய்வோம். * வேத்தியல், பொதுவியல் என்னும் இரு திறமுடைய அகக்கூத்து, புறக்கூத்துக்களும், குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம் நோக்கு, தோற்பாவை என்னும் விநோதக் கூத்துக்களும், அம்மனை, பந்து, கழங்காடல், உந்தி, சாழல், பல்லாங்குழி, அவலிடி, கொற்றி பிச்சி, வாரிச்சி, சிந்துப் பிழுக்கை, குடப் பிழுக்கை, பாண்டிப் பிழுக்கை, பாம்பாட்டி, ஆலங் காட்டாண்டி முதலிய பலவகை வரிக் கூத்துக்களும் பிறவும் அக்காலத்தில் நடிக்கப் பெற்று வந்தன.

அரங்கேற்று காதையில் காவிரிப்பூம் பட்டினத்திலே † கணிகையர் குலத்திற்றோன்றிய மாதவி என்

* சோழர்கள்—ந. மு. வே. நாட்டார். PP 104—105.

† சிலப்பதிகாரம்—ந. மு. வே. நாட்டார் பதிப்பு PP. 44.

பாள் ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றிலும் சிறந்து விளங்குதற் கேற்றவளாய் இருந்தமையின் அவளை ஐந்தாம் ஆண்டில் தண்டியம் பிடிப்பித்து, ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீராண்டெய்திய பின் அரசற்கு அவை யரங்கேறிக் காட்டலை விரும்பி ஆடலாசிரியன், இசையாசிரியன், இயற்றமிழ்ப் புலவன், தண்ணுமை முதல்வன், குழலோன், யாழாசிரியன் என்போர் ஒருங்குகூடித் தக்க நிலத்திலே சிற்ப நூன் முறைப்படி இயற்றப் பட்டதும், விளக்குகள் ஏற்றியும் எழினிகள் வகுத்தும், விதானம் கட்டியும், முத்து மாலை நாற்றியும் புனையப்பட்டதுமாகிய அரங்கின் கண் மாற்றரசரின் குடைக் கொம்பு கொண்டு நவமணி பதித்தியற்றியதும், அரசன் கோயில் வழிபாடு செய்து இருத்தப் பெற்றது மாகிய தலைக் கோலினை நல்ல நாளிலே பொற் குடத்தேந்தி வந்த புண்ணிய நன்னீரால் மண்ணிய பின்பு மாலை யணிந்து அரச யானையின் கையிற் கொடுத்தனர். பின்பு அவர்கள் அவ்யானையுடன் அரசனும், ஐம்பெருங் குழுவும், உடன் வர வலமாக வந்து வீதியிலே தேரின் மிசை நின்று பாடுவான் கையில் அதனைக் கொடுப்பித்து நகரினை வலம் வந்து அரங்கிற் புகுந்து எதிர் முகமாக அதனை வைத்தனர்; வைக்க மாதவியானவள் அரங்கிலே வலக்காலை முன் வைத்தேறி வலத்தூணைப் பொருந்தி அரசன் முதலாயினோர் அவையில் அமர்ந்த பின் குயிலுவக் கருவிகளெல்லாம் கூடி நின்றிசைக்க மங்கலமாகிய பாலைப் பண்ணைப் பாடி, தேசியும் வடுகுமாகிய அகக் கூத்துப் புறக் கூத்துக்களை நூன்முறை வழுவாது பொன்னுலியன்று பூங்கொடி நடப்பதுபோல் ஆடிக்காட்டினாள்.

இதனல் பண்டு அரசன் நாடகக் கலையை நேரில் கண்டதுடன் அக்கலையைப் போற்றிப் பரிசுகள் நல்கினன் என்றறியப் பெறுகிறோம். இன்னும் பண்டிருந்த பல அவிநயங்களைப் பற்றிய குறிப்பும், இசைக் கருவிகளின் இலக்கண அமைதிகளும் நாடகக்கலையாசிரியர்களின் இலக்கணங்களும் நன்கெடுத்து இயம்பப் பெற்றுள்ளன.

நாடக அரங்குகள் புகார் நகரில் பண்டு எப்படி இருந்தன என்பதனை நன்கறிய முடிகிறது. ஆசிரியர் இளங்கோ அடிகள் அரங்கின் அமைதியை,

எண்ணிய நூலோர் இயல்பின் வழா அது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழை
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருபத்து நால்விரல் ஆக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோல் ஆக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய
தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்திப்
பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து

மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்"
—சிலம்பு III (95-113)

என்ற வரிகளில் செப்புகின்றார்.

புகார் நகரத்து அரங்கைப் படத்தில் காணலாம். அவர்கள் கூறியாங்கு நாடக அரங்கு நாற்பது அடி நீள முள்ளதாகவும், முப்பத்தைந்து அடி அகலமுள்ளதாக வும், தரைமட்டத்திற்குமேல் ஐந்தடி உயரமுள்ளதாகவும் இருந்தது. நாடக அரங்கின் உயரம் இருபதுஅடி என்று கூறப்பட்டுள்ளது. நாடக அரங்கின் முன் அரசனும் ஏனைய பணியாளர்களும் அமர்வதற்காகப் பள்ளங்க ளிருக்கும். அவற்றைச் சுற்றி மக்கள் குழுமியிருந்து நாடகத்தைக் காண்பர்.

புகார் நகரம் சித்திரக் கலையில் எவ்வாறு தேர்ச்சி பெற்றிருந்தது என்பதனை இனி நோக்குவோம்.

"ஓவியச் செந்நூலுரை நூற்கிடக்கையும்" என்ற மணிமேகலை அடி ஓவிய சம்பந்தமான நூல் இருந் தமையை அறிவிக்கின்றது. * சிலப்பதிகார உரையாசிரி யர் அடியார்க்கு நல்லாரும் ஓவிய நூலெனை ஒன்றனைக் கூறி அதிலிருந்து சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றார். புகார் நகரத்தில் ஓவியம் வரைவதில் வல்லவர் பலர் நிறைந்திருந்தனர். மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. "மாடக்குச் சித்திரம்" என்பது மாடங்களுக்கு அழகு செய்வது சித்திரம் என்ற தமிழ் நாட்டவரது கொள்கையைக் காட்டுகின்றது. † மாளிகை

* சிலப்பதிகாரம்— உ. வே. சா. பதிப்பு. PP 230.

† மணிமேகலை காதை—3

களிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை மணிமேகலையால் அறியலாம். புகார் நகரத்து வீடுகளின் சுவர்கள் மீது தெய்வங்கள், விலங்கு கள் இவற்றைக் குறிக்கும் வியத்தகு ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. புகார்நகரில் ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் இருந்தது என்பதனை "சித்திரப்படம்" என்னும் 'கானல்வரியிலுள்ள' சொற்றொடர் விளக்கு கின்றது. படம் என்னும் பெயர் இக்காரணத்தி னாலேயே வந்தது; படம் என்றால் வஸ்திரம் என்று பொருள்படும்.

ஓவியம் எழுதுவோர் தாம் எண்ணி இருக்கும் உரு வத்தை, முதலில் குறித்துக் கொண்டு பின்பு வண்ணங் களை யமைத்து அதனை அழகு படுத்துவார்கள். அவ் வாறு முதலில் எழுதப்படுவது "புனையா ஓவியம்" என்று வழங்கப் படும். மணி மேகலையில் இவ்வுவமை 'ஆதிரைப் பிச்சையிட்ட காதை'யில் எடுத்தாளப் படு கின்றது.

புகார் நகரத்தில், திரைகளில் சித்திரங்கள் வரையப் பெற்றிருந்தன. பாயற் கட்டிலைச் சுற்றிக் கட்டப்படும் திரைகளிலும், படுக்கையின் மேல் விரிக்கும் துணிகளி லும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் சிறந்திருந்தன. நெய் யும்பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்து வந் தார்கள்.

இவற்றால் புகார்நகரத்து மக்கள் சித்திரக் கலை யிலும் சிறந்து விளங்கினர் என்பது உள்ளங்கை நெல் லிக் கனிபோலத் தெள்ளிதின் விளங்குகின்ற தன்றோ?

Ground Plan of the Stage.



Front View of the Stage.



1. ஒருமுக எழினி (Left Side Screen)
2-3. பொரு முக எழினி (Two right Side Screen)
4. கரந்து வரம் எழினி ? (Drop)
5. உத்தரப் பலகை. (Cross Beam)
6. அரங்கின் பலகை. (Wooden Floor of the Stage)

சிற்பநூலார் நாடக அரங்கை வகுத்துத் தந்த மையை அடியார்க்கு நல்லார் 'அரங்கேற்று கதை' யின் உரையில் குறிப்பிடுகின்றார். இன்னும் சிற்ப நூல் முறைப்படி மாளிகைகள் அமைக்கப் பட்டிருந்தன என் பதிலிருந்து புகார் நகரத்தில் சிற்பக்கலை இனிதாக விளங்கியது என்று துணிந்து கூறலாம். இன்னும் பாவை விளக்கு புகார் நகரிலிருந்ததாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது செம்பு, பொன் முதலிய உலோகங் களால் செய்யப் பட்டிருக்கலாம். இன்னும் மண்ணாற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாளர் எனப்பட்டனர்.

புகார் நகரில் பலவகைக் கோயில்களும், கோட்டங் களும், மன்றங்களு மிருந்தன என்றறியப் பெறுகிறோம். அவை ஒருகால் சிற்பக்கலையோடு அமைந்திருந்தாலும் அமைந்திருக்க இயலும். பலவகையான தேர்களும், வண்டிகளும் குறிப்பிடப் பட்டிருப்பதி லிருந்து புகார் நகரத்தில் சிற்பக்கலை சிறந்து விளங்கியது எனலாம்.

இவைபோல் பல்வேறன கலைகளுக்கும் இருப்பிட மாகப் புகார் நகரமிருந்தது என்பதனை நுண்மையாக ஆராய்ந்து பார்த்தால் விளங்குகின்றது.

௯

மறைந்த புகார் நகரம்

தமிழ் கூறு நல்லுலகம் முழுதும் தன் புகழொளியைப் பரப்பி வந்த புகார் நகரம் அழிவுற்ற காலத்தைத் திட்டமாக வரையறுக்க முடியாமலிருக்கிறது. திரு. ஆராவமுதன் புகார் நகரம் அழிவுற்ற காலத்தை வரையறுக்க முயன்று இறுதியில் தனது முயற்சியில் வாகை சூட இயலாமலிருத்தலைக் காணலாம். * புகார் நகரம் கி. பி. 170 ல் அழிவுற்றிருக்கலாமெனத் திரு. இராமச்சந்திர தீட்சிதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ‡ திரு L. D. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், அடியார்க்கு நல்லார் கூறிய குறிப்பு வழுவுடைத்தென்றுராக, சிலப்பதிகார ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர், கொடைக்கானல் வானிய லாராய்ச்சியாளர் துணைகொண்டு அக் குறிப்புகளை ஆராய்ந்து † "இந்திர விழா கி. பி. 174 ம் ஆண்டு, சித்திரைத் திங்கள் முதல் நாள் சனிக்கிழமை தொடங்கியது" என்று குறிக்கின்றார்.

---

* The Silappadikaram-V. A. Ramachandra Dikshadan. PP. 32.

‡ சிலப்பதிகார ஆராய்ச்சி - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை PP. 109.

† Astronomical date & the date of Silappadikaram. PP. 354-9

திரு. இராமச்சந்திர தீட்சிதர் கி. பி. 170 ல் புகார் அழிவுற்றிருக்கலாம் என்று குறிப்பிடுகிறார். திரு. L. D. சாமிக் கண்ணுப்பிள்ளை கி. பி. 174 ல் இந்திர விழா தொடங்கியது என்று கூறுகிறார்.

இவ்விரண்டும் ஒன்றற் கொன்று நேர் முரணாக இருக்கிறது. எனவே புகார் நகரம் அழிவுற்ற காலத்தை உறுதிப் படுத்துவது அருமைதான்.

தமிழ் நாட்டின் தென்கரை மட்டுமன்றி, அதன் கீழ்க்கரையும் இலங்கையும் கூடப் பல சிறு கடல் கோள்களுக்கு உட்பட்டன என்று தோன்றுகின்றது. வடமொழி வான நூலார் தமது உலக * நடு வரையை இலங்கையில் ஏற்படுத்தினர். ஆனால் இன்று அஃது இலங்கை வழிச் செல்லாமல் கடலூடு செல்வதிலிருந்து அந்த இடம் முன்பு இலங்கையைச் சார்ந்திருந்தது என்று உய்த்துணரக் கிடக்கின்றது. இன்னும் மெகாஸ்தனீஸ் என்னும் அறிஞன் இலங்கையைத் † தாப்பிரபனே என்று கூறுவதுடன் அஃது இந்தியாவினின்று ஓர் ஆற்றினால் பிரிக்கப் பட்டுள்ளது என்று கூறியிருக்கின்றார். இதிலிருந்து தாமிர பரணி என்ற பொருநையாறு கடலுள் மூழ்கிய நிலத்தின் வழியாக இலங்கை யூடு சென்றிருக்க வேண்டுமென்று ஏற்படும். அப்போதேற்பட்ட கடற் கோளினால் கிழக்குக் கரையில் காவிரிப்பூம் பட்டினமேயன்றி வேறு பல தீவுகளும் அழிந்தன என்று தெரிய வருகின்றது. இன்றுகூட, குமரியில் உள்ள மூன்று கோயில்களுள் ஒன்று கடலுள் மூழ்கி அழிந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அண்மையில் இலங்கைத் தீவின் கரையோரங்களும் கடல் அலைகளால் அழிக்கப்பட்டு வருவதாகச் செய்தித்தாள்களில் குறிப்பிடப் பட்டிருந்தது. இவையனைத்தும் தமிழ் நாட்டுள் கடலலைகள் அடிக்கடி மோதி அழித்திருக்கக் கூடும் என்று நம்ப இடந் தருகின்றன.

மணிமேகலை "தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை" என்னும் பகுதியில் பூம்புகார் கடல் கொண்ட செய்தி எடுத்துரைக்கப் படுகின்றது. புகார் நகரம் அழி வுற்றதற்குக் கூறப்படும் காரணத்தை நோக்குவோம்.

முன்னாளில் நெடுமுடிக் கிள்ளியாகிய சோழ வேந்தன் புகார் நகரத்துக் கடற்கரையிலுள்ள புன்னை மரச் சோலையில் உலவிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்குப் பேரழகு உடைய மங்கை ஒருத்தி தோன்றி ஞள். அரசன் அவளோடு ஒரு திங்கள் அச்சோலை யிலேயே வாழ்ந்தான். அப்பெண் கருவுற்ருள். ஒரு நாள் அவள் சோழனுக்குத் தெரிவிக்காமல் தன் ஊருக் குப் போய்விட்டாள். அரசன் அவளைப் பல இடங் களிலும் தேடி அலைந்து கொண்டிருந்தான். அப் போது அவன் முன் அற்புத ஆற்றல் பெற்ற சாரணன் ஒருவன் தோன்றினன். அரசன் அவனைக் கண்டு வணங்கி, 'என் உயிர் அனையாள் எங்குச் சென்ருள் என்பதனை அறியாமல் நான் வாடுகின்றேன். அவளைத் தாங்கள் கண்டதுண்டோ?" என்று கேட்டான். சார ணன் "நான் அவளை இப்போது பார்க்கவில்லை. முன்பு அவளை நான் அறிவேன். அவள் நாக நாட்டு அரசன் வளைவணன் என்பானுக்கும் அரசி 'வாசமயிலை' என் பாளுக்கும் பிறந்தவள். அவள் பெயர் பீலிவளை என் பது. அவள் பிறந்தபோது சோதிடன் 'இவள் சூரிய குல வேந்தனைக் கருவுற்று வருவாள்' என்று கூறி ஞன். ஆதலால் அவள் உன்னிடமிருந்து மறைந்தாள். அவள் இனிஉன்மாட்டு வந்துசேராள். அவள்பெற்ற மகனே அனுப்பப்படுவான். வேந்தே! உன் கவலையை விடுக! இந்நகரை மணிமேகலா தெய்வத்தின் சொல்லா லும், இந்திரன் சாபத்தாலும் இந்திரவிழா நடத்தப்பட வில்லையாயின் கடல் கொண்டுவிடும். ஆதலால் அதனைத் தவருது யாண்டுதோறும் செய்துவருக" என்ற செய்தி "ஆபுத்ரன்நாட்டை அடைந்தகாதை"யில் கூறப்படுகின் றது. 'ஆபுத்திரனோடு மணிமேகலை அடைந்தகாதை' யில்

தீவதிலகை மணிமேகலையைப் பார்த்து "பீலிவளை தன் மகனை எடுத்துவந்து இத்தீவையும் பீடிகையையும் வலம் வந்து வணங்கினாள். அப்பொழுது புகார் செல்லும் கம்பளச் செட்டியின் கப்பல் இங்கு வந்து தங்கியது. பீலிவளை அவனிடம் வந்து 'இம்மகன் சோழவேந்தன் மகன். இவனை அவனிடம் சேர்த்துவிடுக' என்று கூறி மகனைக் கம்பளச் செட்டியிடம் ஒப்புவித்தாள். அவனும் மிகுந்த மகிழ்ச்சியோடு அம்மகனைப் பெற்றுப் புறப்பட்டான். வழியில் கப்பல் நடுக்கடலில் உடைந்து விட்டது. அதிலிருந்து தப்பிப் பிழைத்த சிலர் சோழ வேந்தனிடம் சென்று மைந்தன் கடலில் தவறிய செய்தியைக் கூறினர். அது கேட்ட கிள்ளிவளவன் தன்னை மறந்தவனாய்க் கடற்கரையில் மகனைத் தேடி அலைந்தான். இக் குழப்பத்தில் நகரத்தார் இந்திரவிழாச் செய்தலை மறந்தனர்.

அதனால் மணிமேகலா தெய்வம் 'இந் நகரைக் கடல் கொள்க' என்று சபித்தது. அதனால் நகரைக் கடல் மூடியது. அரசன் வேறு இடம் சென்றான். அறவண அடிகள் மாதவியோடும் சுதமதியோடும் வஞ்சிமா நகரம் சென்றனர்" என்றாள்.

இங்குப் புகார் நகரத்தைக் கடல் கொண்டதற்கு இந்திர விழாக் கொண்டாடத் தவறியதுதான் என்று புனைந்தெழுதியிருப்பது நன்கு விளங்குகின்றது. இயல்பாக நிகழ்வதைச் சீத்தலைச் சாத்தனார் காப்பியத்தில் ஏற்ற இடத்தில் புகுத்தியிருக்கிறார் என்றே கூற வேண்டும்.

இதிலிருந்து புகார் நகரத்தைக் கடல் கொண்டது கிள்ளிவளவன் காலத்திலென்பதும், கோவலன் கொலையுண்ட பிறகு என்பதும் தெரிய வருகின்றன.

புகார் நகரம் அழிவுற்ற காலத்தை ஆராய்வோம். * குமரியாறு கடலுள் அமிழ்ந்த காலத்தை ஒட்டியே

* "கடல் கொண்ட தென்னாடு"—கா. அப்பாதுரைப் பிள்ளை.

மணிமேகலையுட் கூறப்பட்டபடி புகார் நகரம் கடல் மயமானது. வங்காளக் குடாவிலுள்ள சில பெரிய தீவுகளும் இதனுடன் அழிந்திருக்க வேண்டும்." நாக நன்னாட்டு நானூறி யோசனை வியன் பாதலத்து வீழ்ந்து கேடெய்தும்" என்றது காண்க.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஒரு கடல்கோள் ஏற்பட்டதென்றும், அதனால் வடநூல்களில் மகேந்திரம் என்று அழைக்கப்பட்டு வந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் சிறு பகுதியும், கிழக்கே இருந்த சில தீவுகளும் அழிந்தன என்றும் தெரிய வருகிறது. எனவே இரண்டாம் நூற்றாண்டிலேற்பட்ட கடற்கோளினால் புகார் நகரம் அழிந்திருக்கக் கூடும்.

குமரியாறு கடலாக மாறியதும், அது "தொடியோள் பௌவம்" என்றும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. குமரியாறு கடலாக மாறியதும், புகார் நகரம் கடலுள் மூழ்கியதும் ஒரே காலத்திலே என்று கூறப்படுகின்றது. எனவே சிலப்பதிகார ஆசிரியர் காலத்தில் புகார் நகரம் கடலுள் அழிந்து விட்டது எனலாம்.

அவ்வாறு புகார் நகரம் கடலுள் மூழ்கி அழிந்து விட்டதனை நன்குணர்ந்த சிலப்பதிகார ஆசிரியர் தனது நூலில் புகார் நகரத்தைச் சிறப்பித்ததனோடு அமையாது "பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!" என்று கூறியது என்னை என்பனை நோக்குவோம்.

சிலப்பதிகாரம் என்ற சிறந்த காப்பியத்தின் தலைமகனும், தலைமகளும் பிறந்த ஊர் புகார் என்றமை யானும், மிக்க கடலை வேலியாகவுடைய உலகின்கண் சோழனது குலம்புகழ்வார் அவனது தலைநகராகிய புகாரையும் புகழ்வாராகலின் என்க.

எனவே இளங்கோ அடிகள் காலத்தில் புகார் அழிந்து விட்டது என்று கோடல் தவறன்று. சோழன்

கரிகாலன் காலத்தில் புகார் அழிந்து விடவில்லை சிறப்புடன்தானிருந்தது. சோழன் கரிகால்வளவனுக்கும் இளங்கோ அடிகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் புகார் அழிந்தது என்பது நன்கு விளங்குகின்றது.

"மணிமேகலை" காப்பியத்தின் மூலம் மணிமேகலை காலத்தில் புகார் அழிந்தது என்று தெரிகின்றது. மணிமேகலையின் காலத்தை ஆராய்வதில் பயனில்லை. ஏனெனில் இராவ்சாகிப். திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் * சிலப்பதிகாரம் உண்மையில் நடந்த நிகழ்ச்சியன்று. நற்றிணையிலுள்ள பாடலொன்றின் விரிவு எனலாம்' என்று எழுதியுள்ளார். அதனால் வேறு வழியில்தான் ஆராய்தல் வேண்டும்.

கிள்ளிவளவன் காலத்தில் புகார் அழிந்தது என்று மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிள்ளிவளவன் வரலாற்றில் நெடுமுடிக்கிள்ளி என்று குறிப்பிடப்பட்டுள்ளான். கரிகாலன் காலம் கி மு. 60 முதல் கி. மு. 10 எனக் கொள்ளல் சாலச் சிறந்தது. நெடுமுடிக் கிள்ளி காலம் கி. பி. 150 முதல் 200 ஆகும். இவ்விரு வேந்தருக்கு மிடையில் சோழன், நலங்கிள்ளி, கிள்ளி வளவன், கோப்பெருஞ் சோழன், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி, தித்தன் என்ற ஆறுவேந்தர்கள் ஆண்டு வந்தனர் என்று வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர்.

எனவே புகார் நகர் கி. பி. 150 க்கும் 200 க்கும் இடையில் அழிந்திருக்கலாம். திரு. இராமச்சந்திர தீட்சிதர் கி. பி. 170 ல் புகார் அழிந்திருக்கலாம் என்பது சற்றுப் பொருந்தி வருகிறது.

கி. பி. 450 ல் வாழ்ந்த புத்ததத்தர் சங்க காலத்திற்குப் பின்னும், களப்பிரர் ஆட்சிக்குப் பின் பல்ல

---

* சிலப்பதிகாரம்—டாக்டர் R. K. சண்முகம் செட்டியார் (புகார்க்காண்டம்)—முன்னுரை—திரு. வையாபுரிப் பிள்ளை

வரும் பாண்டியரும் தலையெடுத்த காலத்திற்கு முன்னும், வெளியிட்ட அபிதம் மாவதாராவில் "களப்பிர குல திலகன் அச்சுதவிக்கத்தன் ஆளுகையில் இவ் வெளியீடு எழுதி முடிக்கப்பட்டது" என்று குறித்துள்ளார். அதில் அவர் "காவிரிப்பூம் பட்டினம் பெரு மாளிகைகளும் பெருஞ் சோலைகளும் பெருஞ் சிறப்புக்களும் நிறைந்தது" என்று எழுதியிருப்பதாலும், இயற்பகை நாயனார் காலத்தில் சிறப்பாக இருந்தது என்பதாலும், தேவார ஆசிரியர் திருஞானசம்பந்தனார் புகார் நகரில் மாடமாளிகைகள் இருந்தன என்பதனாலும் புகார் முழுவதும் கடலால் கொள்ளப்பட்டது என்று கூற முடியவில்லை. * திரு. ஆராவமுதன் கூறியுள்ளபடி ஒருகால் கடலுள் மூழ்கிய நகரம் சிறிது சிறிதாக வெளிப்பட்டு இருந்தாலும் இருக்கலாம்.

இத்தகைய சிக்கலான பொருள்களைத் திண்மையாகக் கூற † நிலநூல் ஆராய்ச்சி அவண் செய்தல் மிகவும் இன்றியமையாததாகும். அங்குள்ள மட் பாண்ட சிதைவுகளும், ஏனைய தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களும் அரிக்க மேட்டில் கிடைத்த மட் பாண்ட சிதைவுகளைப் போலிருக்கின்றன.

"இப்போதுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் வாழும் பரதவர்களும் கடலுள் பல புராதன பொருள்களிருக்கலாம் என்று கூறுகின்றனர். பழைய கட்டிடங்களும் மாளிகைகளும் சிதைந்து கடலிற்குள் இருக்கலாம். அவற்றை நீர் மூழ்கிக் கப்பல்கள் வாயிலாக ஆராய்ந்து படம் பிடித்து ஆராய்ச்சி செய்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும்" என்று அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாளைய துணை வேந்தர் டாக்டர். மணவாள ராமானுஜம் அவர்கள் கூறியதனை அரசாங்கம் சிந்தித்துத் தக்க முயற்சி எடுத்துக் கொண்டால் மறைந்த புகார் நக

* The Sangam Age—Mr. Aramudan. PP. 63.

† Geology.

ரத்தைப் பற்றி மேலும் அறிய நமக்கு வாய்ப் பேற்படும் என்பது ஒருதலை. அண்மையில், எகிப்து ராணி கிளியோபெட்ராவின் அரண்மனை யிருந்த இடத்தைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சி செய்ய அலெக்சாண்டிரியா நகராண்மைக் கழகம் ஓர் இலட்சத்து முப்பதினாயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது என்றறியப் பெறுகிறோம்.

பழங்கால அரண்மனையைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சி செய்வதில் வெளி நாட்டார் மிகவும் முயன்றிருக்கும் போது, பழங்காலச் சிறந்ததொரு நகரத்தை இதுகாறும் நாம் ஆராய்ச்சி செய்யாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். அரசாங்கமும் இம்முயற்சியில் ஈடுபடாமல் வாளா இருந்தால் தமிழகத்துக்குத் தீங்கு செய்ததாகும். இம்முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டால் ஒருகால் பழங்கால விலை மதிப்புள்ள பொருள்களும் பிறவும் கிடைக்கப் பெறலாம். எனவே மறைந்த புகார் நகரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வோருக்கு நாம் ஊக்கமளித்தல் வேண்டும்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்சியின்மை
யின்மை புகுத்தி விடும்".

(குறள். 616.)

LIBRARY
107929

SELECTED BIBLIOGRAPHY

1. Annals of the oriental Research Institute Madras university 1952.
2. Annamalai university Magazine Vol. I 1932.
3. A. R. E. 1919. Part II. No. 2.
4. Asoka's Edict. V. XII
5. Colas.—Prof. K. A. Nilakanda Sastri.
6. Chronology of the early Tamils-K. N. Sivaraja Pillai.
7. Ep. Indica. Vol. 11.
8. Mahavamsa-Edited and translated by Geiger (Pali Text Society)
9. Mc. Crindle in Indian Antiquary. Bombay XIII.
10. Tamils' 1800 Years Ago-Kanagasabai Pillai.
11. The Epigraphists' Report—1906. Sec. 4. Large Leydon Grand Arch.
12. The Kaveri, the Maukharis and the Sangam Age—T. G. Aramudan.
13. The Sila-p- padikaram- V. A. Ramachandra Dikshadar.
14. அகநானூறு—ந. மு. வே. பதிப்பு.
15. ஆராய்ச்சித் தொகுதி—மு. ராகவ ஐயங்கார்.
16. ஊரும் பேரும்—ரா. பி. சேதுப் பிள்ளை.
17. கடல்கொண்ட தென்னாடு-கா. அப்பாதுரைப்பிள்ளை.
18. கலிங்கத்துப்பரணி (கன்னையா நாயுடு பதிப்பு).
19. குலோத்துங்க சோழனுலா.
20. சாத்தனார் கோயில்கள் — சுந்தரேசவாண்டையார் (தமிழ்ப்பொழில் 1934-35)

21. சிலப்பதிகாரம்—உ. வே. சா. பதிப்பு.
22. சிலப்பதிகாரம்—ந. மு. வே. பதிப்பு.
23. சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்)- Dr. R. K. சண்முகம் செட்டியார்.
24. சிலப்பதிகார ஆராய்ச்சி — ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.
25. சிலப்பதிகார விளக்கம்—ரா. பி. சேதுப்பிள்ளை.
26. சீவக சிந்தாமணி—உ. வே. சா. பதிப்பு.
27. சோழர்கள்—ந. மு. வே. நாட்டார்.
28. சோழர் வரலாறு—Dr. மா. இராசமாணிக்கம்.
29. திருக்குறள்—தருமபுர ஆதீன வெளியீடு.
30. திருக்குறள் — சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.
31. பத்துப் பாட்டு—உ. வே. சா. பதிப்பு.
32. பதிற்றுப் பத்து—ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.
33. பதிற்றுப் பத்து—உ. வே. சா.பதிப்பு.
34. புறநானூறு—உ. வே. சா. பதிப்பு.
35. புறநானூறு—ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.
36. பெரியபுராண ஆராய்ச்சி- Dr. மா. இராசமாணிக்கம்
37. மணிமேகலை—ந. மு. வே. நாட்டார்.
38. முதலாம் கரிகாலன்—L. உலகநாதப் பிள்ளை.
39. விக்கிரம சோழனுலா.
40. திருமாவளவன்—புலவர். கோவிந்தன்.

★

ஸ்ரீமகள் அச்சகம் சென்னை-1 756-1-3

மகாத்மாஜீயின் புத்தகங்கள்

சத்திய சோதனை

மகாத்மா காந்திஜீயின் சுய சரிதை. அமரர் கல்கி அவர்களின் மொழி பெயர்ப்பு. 872 பக்கங்கள். உயர்ந்த கிளேஸ் பதிப்பு, காலிகோ பைண்ட் **விலை ரூ. 6—0—0**

ஆரோக்கிய வழி

உடலும், உள்ளமும் தூய்மையாய் இருப்பதன் மூலமே ஆரோக்கிய வழியில் நடக்க இயலும் என்பதை விளக்கிக் காந்தியடிகள் இந்நூலில் கூறியுள்ளார். அட்டை பைண்ட்

விலை ரூ. 2—0—0

இல்லறமும் பிரமசரியமும்

கர்ப்பத் தடை முறைகளைக் கண்டித்து இந்திரிய நிக்ரகத்தை விளக்கி மகாத்மாஜீ எழுதியிருக்கும் உயர்ந்த கட்டுரைகள் அடங்கியது. அட்டை பைண்ட் **விலை ரூ. 2—0—0**

உத்தம வாழ்க்கை

காந்தியடிகள் எரவாடாச் சிறையினின்று சபர்மதி ஆசிரம வாசிகளுக்குச் செய்த பல அரிய உபதேசங்கள் அடங்கியது.

அட்டை பைண்ட் **விலை ரூ. 1—4—0**

ஹிந்து தர்மம்

ஹிந்து சமயத்தின் பற்பல அரிய தத்துவங்களை இலகுவாக எவருக்கும் மனதில் பதியத்தக்க விதமாக மகாத்மா எழுதியுள்ள வியாசங்கள் அடங்கியிருக்கின்றது.

அட்டை பைண்ட் **விலை ரூ. 1—0—0**

மகா தியாகம்

மகாத்மா காந்தியடிகளின் உபவாச உண்ணாவிரத சரித்திரங்கள் அடங்கியது. அட்டை பைண்ட் **விலை ரூ. 1—8—0**

அனாஸக்தி யோகம்

மகாத்மா காந்தியவர்கள் எழுதிய பகவத் கீதையின் சிறந்த மொழிபெயர்ப்பு.

அட்டை பைண்ட் **விலை ரூ. 2—0—0**

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1.